

# SOGIESC அடிப்படையிலான மனித உரிமை மீறல்களுக்கான தீர்வினை பெறுதல்

## தொகுதி 04

பலதரப்பட்ட SOGIESC இனை கொண்டுள்ள மக்களுக்கு எதிரான அடிப்படை உரிமை மீறல்கள் மற்றும் குற்றங்களுக்கான நீதியைப் பெறல்

# கண்ணோட்டம்

இந்த பயிற்சி வழங்குநர் வழிகாட்டியை உருவாக்குகின்ற 4 தொகுதிகளை கொண்ட வரிசையில் இதுவே இறுதியானதாகும். இந்த தொகுதி, அடிப்படை உரிமை (FR) மீறல்களுக்கான தீர்வு வழிமுறைகள் தொடர்பிலும் குற்றவியல் குற்றங்களுக்கு முகங்கொடுக்கின்ற பொழுது தீர்வை பெறுவது தொடர்பிலும் கவனம் செலுத்துகிறது.

குற்றவியல் குற்றங்களுக்கான தீர்வு வழிமுறைகளின் கீழ், இலங்கையின் நீதிமன்ற முறைமை, முறைப்பாட்டு நடைமுறை மற்றும் மத்தியஸ்தம் ஆகியவை கலந்துரையாடப்படுகின்றன. அடிப்படை உரிமை (FR) மீறல்களுக்கான தீர்வு வழிமுறைகளின் கீழ், உயர்நீதிமன்றத்திடமிருந்து நிவாரணம் பெறுதல் மற்றும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு (HRCSL) மற்றும் நிர்வாகத்திற்கான குறைகேள் அதிகாரி (Ombudsman) இற்கு விண்ணப்பித்தல் ஆகியவை கலந்துரையாடப்படுகின்றன. கைது செய்யப்பட்ட அல்லது தடுப்புக்காவலிலுள்ள ஒரு நபரின் உரிமைகள் பற்றியும் இத் தொகுதி கலந்துரையாடுகின்றது.

உள்ளடக்கத்தை வழங்குவதற்கான வழிமுறைகளான ஸ்லைடுகள், கலந்துரையாடல்கள் மற்றும் நாடகம் போன்றவற்றின் உதவியுடனான விரிவுரைகளை இந்த தொகுதி பயன்படுத்துகின்றது.

இந்த தொகுதி 6 மணித்தியாலங்களில் நடாத்தப்படுகிற 5 அமர்வுகளை கொண்டுள்ளது.



# இணைய குறிப்பு

தொகுதி 4 மற்றும் விளக்கக்காட்சியின் இணைய பதிப்பை அணுக,
கீழே உள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்:

அல்லது உங்கள் உலாவியில் கீழே உள்ள URL இணைப்பை தட்டச்சு செய்யவும்.

**www.shorturl.at/opGH3**

# அமர்வுத் திட்டம்

நேரம்: மு.ப 09:00 - பி.ப 05:00 (6 மணித்தியாலங்கள்)

| ஆரம்ப நேரம் | ஒதுக்கப்பட்ட நேரம் | அமர்வு |
|---|---|---|
| மு.ப 09:00 | 15 நிமிடங்கள் | 3ஆவது நாள் மீளாய்வு |
| மு.ப 09:15 | 1 மணித்தியாலம் | அமர்வு 01:<br>சாதாரண குற்றத்திற்கும் ஒரு மனித உரிமை மீறலிற்கும் இடையிலான வேறுபாடு<br>*(செயற்பாடு & கலந்துரையாடல்)* |
| மு.ப 10.15 | 1 மணித்தியாலம் | அமர்வு 02:<br>குற்றவியல் குற்றங்களுக்கான தீர்வு<br>*(ஸ்லைடுகளின் உதவியுடனான விரிவுரை)* |
| மு.ப 11:15 | 15 நிமிடங்கள் | இடைவேளை |
| மு.ப 11:30 | 1 மணித்தியாலம் | அமர்வு 03:<br>ஒரு அடிப்படை உரிமை மீறலுக்கான தீர்வு<br>*(ஸ்லைடுகளின் உதவியுடனான விரிவுரை)* |
| பி.ப 12:30 | 1 மணித்தியாலம் | மதியநேர இடைவேளை |
| பி.ப 01:30 | 45 நிமிடங்கள் | அமர்வு 04:<br>கைது மற்றும் தடுப்புக்காவலில் வைக்கப்படும் பொழுதான உரிமைகள்<br>*(கலந்துரையாடல்)* |
| பி.ப 02.15 | 1 மணித்தியாலம் 30 நிமிடங்கள் | அமர்வு 05:<br>நடைமுறையிலுள்ள ஒரு குற்றவியல் குற்றத்திற்கான அல்லது ஒரு அடிப்படை உரிமை (FR) மீறலுக்கான தீர்வு<br>*(நாடகம்)* |
| பி.ப 03:45 | 15 நிமிடங்கள் | இடைவேளை |
| பி.ப 04.00 | 30 நிமிடங்கள் | அமர்வு *05 தொடர்ச்சி* |
| பி.ப 04.30 | 15 நிமிடங்கள் | பிந்தைய மதிப்பீடு |
| பி.ப 04:45 | 15 நிமிடங்கள் | நிறைவு மற்றும் இறுதி கருத்துக்கள் |

# அமர்வு 01: சாதாரண குற்றத்திற்கும் ஒரு மனித உரிமை மீறலிற்கும் இடையிலான வேறுபாடு

*கலந்துரையாடலை தொடர்ந்து ஒரு செயற்பாடு*

## நேரம்

1 மணித்தியாலம்

## இலக்கு குழு

அனைத்து குழுக்களும்
ஏறத்தாழ ஒரு குழுவில் 30 பங்கேற்பாளர்கள்

## குறிக்கோள்கள்

இந்த அமர்வின் முடிவில், பங்கேற்பாளர்களால்:

- சாதாரண குற்றத்தையும் ஒரு மனித உரிமை மீறலையும் வேறுபடுத்த முடியும்.

## தேவையான கருவிகள்

- இந்த அமர்வு திட்டத்தின் முடிவில் இணைப்பின் அச்சுப்பிரதி (Printout of the Annex)

## தயாரிப்பு

- ஸ்லைடுகள்

## படிமுறைகள்:

- இந்த அமர்வில், பங்கேற்பாளர்கள் சாதாரண குற்றம் மற்றும் ஒரு மனித உரிமை மீறல் ஆகியவற்றுக்கு இடையிலான வேறுபாட்டை கற்றுக்கொள்வார்கள் என்பதை விளக்கவும்.

- பங்கேற்பாளர்களை 5 குழுக்களாக பிரிக்கவும்.

- ஒவ்வொரு குழுவிற்கும் 1 காட்சியை கொடுத்து, காட்சிகளின் அச்சுப்பிரதிகளை குழுக்களுக்கிடையே பகிர்ந்தளிக்கவும் (அமர்வுத் திட்டத்தை காட்டுகின்ற இணைப்பில் (annex) காணப்படுகின்றது).

- கொடுக்கப்பட்ட காட்சியானது ஒரு சாதாரண குற்றமா அல்லது ஒரு மனித உரிமை மீறலா என்பதை பற்றி கலந்துரையாடுவதற்கு குழுக்களுக்கு 20 நிமிடங்களை கொடுக்கவும். 20 நிமிடங்களின் முடிவில், ஒவ்வொரு குழுவையும் அந்த காட்சியையும் மற்றும் அந்த காட்சி ஏன் ஒரு சாதாரண குற்றமாகவோ அல்லது ஒரு மனித உரிமை மீறலாகவோ இருக்கின்றது என்று அவர்கள் முடிவுசெய்தார்கள் என்பதை விளக்குமாறு அழைக்கவும்.

- ஒவ்வொரு குழுவிலும் குறைந்தபட்சம் ஒரு தடவையாவது கலந்துகொண்டு, காட்சிகளின் முக்கிய கூறுகளை அடையாளம் காண்பதற்கு அவர்களுக்கு ஆதரவளிக்கவும்.

- ஒவ்வொரு குழுவும் முன்வைத்த பின்பு, அது ஒரு சாதாரண குற்றமாகவோ அல்லது ஒரு மனித உரிமை மீறலாகவோ இருக்கின்றது என்பதற்கான காட்சியின் முக்கிய அம்சங்களை சுருக்கமாக சொல்லவும்.

- ஸ்லைடுகளின் உதவியுடனான விளக்கக்காட்சிக்கு (presentation) செல்லவும். விளக்கக்காட்சிக்கான குறிப்புகள் கீழே உள்ள 'குறிப்புகள்' பிரிவில் காணப்படுகின்றன.

### குறிப்புக்கள்:

## சாதாரண குற்றத்திற்கும் மனித உரிமை மீறலுக்கும் இடையிலான வேறுபாடு

**சாதாரண குற்றம்**

குற்றவியல் நீதி முறைமை என்பது பொதுவான குற்றத்தின் நிகழ்வுகளை நிவர்த்தி செய்ய அரசின் வசம் இருக்கின்ற ஒரு கருவியாகும். அரசினது மையச்செயற்பாடு அதனுடைய குடிமக்களுக்கு பாதுகாப்பு வழங்குவதாகும். மேலும் குற்றவியல் நீதி முறைமை இதற்கு உதவுகின்றது.

குற்றவியல் சட்டங்கள் பின்வருவனவற்றில் காணப்படுகின்றன:

- தண்டனைச்சட்டக்கோவை பெருங்குற்றங்கள் (crimes) மற்றும் குற்றங்கள் (offenses) அத்தோடு அவற்றின் தண்டனையை நிறுவுகின்றது)
- குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (தண்டனைச்சட்டக்கோவையில் அமைக்கப்பட்டுள்ள கணிசமான குற்றவியல் சட்டங்களின் நிர்வாகத்திற்கான நடைமுறையை நிறுவுகின்றது)

குற்றவியல் சட்டம் பொதுவாக சமூகத்திலுள்ள தனிநபர்களுடைய உரிமைகள் மற்றும் கடமைகளையும், குறிப்பிட்ட குற்றங்களின் கூறுகள் மற்றும் பல்வேறுபட்ட குற்றவியல் பாதுகாப்புக்கூறுகளையும் வரையறுக்கின்றது. குற்றவியல் நடைமுறை என்பது பொதுவாக குற்றவியல் செயன்முறையின் பொழுது, உதாரணமாக, சட்ட நடைமுறை விசாரணை, கைது, குற்றச்சாட்டுகள், விசாரணை மற்றும் மேன்முறையீடு ஆகியவற்றின் பொழுதான தனிநபர்களுடைய உரிமைகள் அமலாக்கமாகும்.

நீங்கள் ஒரு குற்றவியல் குற்றத்திற்கு உட்படுத்தப்பட்டால், முதலாவது படிமுறையானது பொலிசாரிடம் ஒரு முறைப்பாட்டை மேற்கொள்ளுவதாகும். அனைத்து குற்றவியல் வழக்குகளும் அரசினால் தண்டிக்கப்படுகின்றன. அதாவது, உங்களுக்கு எதிரான ஒரு குற்றத்தை எடுத்துக் கொண்டால், நீங்கள் ஒரு

சட்டத்தரணியை தேடிக்கண்டுபிடித்து, சட்டக்கட்டணத்தை செலுத்த வேண்டியதில்லை; அது அரசின் கடமையாகும். சட்டமா அதிபர் திணைக்களத்துடன் பொலிசாரும் இணைந்து குற்றவியல் வழக்கை தொடர்வார்கள்.

**மனித உரிமைகள்**

மனித உரிமைகள், அரசினைச் சார்ந்திருப்பவை அல்ல, மாறாக வேறு எந்த காரணிகளையும் பொருட்படுத்தாமல் அனைத்து தனிநபர்களுக்கும் சார்பானவையே. ஒர ஆணோ பெண்ணோ ஒரு தனிமனிதராக இருக்கின்ற ஒரே காரணத்தினாலேயே அவை ஒரு தனிநபருக்கு இயல்பாகவே இருக்கின்ற உரிமைகளாகும். மனித உரிமைகளின் நோக்கமானது அரசின் அதிகாரத்திற்கு எதிராக தனிநபரை பாதுகாப்பதேயாகும். சர்வதேச மனித உரிமைகள் உடன்படிக்கைகளை எடுத்துக்கொள்வதன் மூலம் இந்த பாதுகாப்பு சட்டபூர்வமாக மிகவும் பயனுள்ளதாகியுள்ளது

இலங்கையில், மனித உரிமைகள், நாட்டின் அரசியலமைப்பு சட்டத்தின் வளர்ச்சியால் பாதுகாக்கப்படுகின்றன. எமது அரசியலமைப்பில் வழங்கப்பட்டிருக்கின்ற அடிப்படை உரிமைகள் மற்றும் அடிப்படை உரிமைகளை மீறுவதற்கான தேவைப்பாடு போன்றவற்றை உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்வதன் மூலம் அல்லது இலங்கையின் மனித உரிமைகள் ஆணையகத்திற்கு முறைப்பாடு அளிக்கும் பொறிமுறையின் மூலம் பெறலாம்.

**சர்வதேச மனித உரிமைகள் சமவாயங்கள்**

மனித உரிமைகள் பற்றிய உலகளாவிய பிரகடனம் (UDHR) என்பது உலகளாவிய ரீதியாக பாதுகாக்கப்பட வேண்டிய அடிப்படையான மனித உரிமைகளை அடையாளப்படுத்துகின்ற முதலாவது சட்ட ஆவணமாக இருக்கின்றது. UDHR இலுள்ள உரிமைகள் பின்வருமாறு:

- **உறுப்புரை 3 - உயிர்வாழ்வதற்கான உரிமை**
  அனைவருக்கும் உயிர்வாழ்வதற்கான, சுதந்திரத்திற்கான மற்றும் பாதுகாப்பிற்கான உரிமை உண்டு.

- **உறுப்புரை 7 - சமத்துவத்திற்கான உரிமை**
  அனைவரும் சட்டத்திற்கு முன்பாக சமமானவர்களாவர் மற்றும் சட்டத்தின் சமமான பாதுகாப்பிற்கு எந்தவொரு பாகுபாடுமில்லாமல் உரிமையுள்ளவர்களாவர். இந்த பிரகடனத்தை மீறுவதிலுள்ள எந்தவொரு பாகுபாட்டிற்கும் எதிரான மற்றும் அத்தகைய பாகுபாட்டிற்கான எந்தவொரு தூண்டுதலுக்கும் எதிரான சமமான பாதுகாப்பிற்கு அனைவரும் உரிமையுள்ளவர்களாவர்.

- **உறுப்புரை 9 - தன்னிச்சையான கைதிலிருந்து விடுதலைக்கான உரிமை**

எவரும் தன்னிச்சையான கைது, தடுப்புக்காவல் அல்லது நாடுகடத்தலுக்கு உட்படுத்தப்பட மாட்டார்கள்.

- **உறுப்புரை 12 – அந்தரங்கத்துக்கான உரிமை மற்றும் குடும்ப வாழ்விற்கான உரிமை**

ஒருவருடைய அந்தரங்கத்துக்கான உரிமை, குடும்பம், வீடு அல்லது அவருடன் தொடர்புடைய கௌரவம் மற்றும் அவரது புகழ் மீதான இடையூறுகள் மற்றும் தாக்குதல்களுக்கு எவரும் உட்படுத்தப்படகூடாது. அத்தகைய குறுக்கீடு அல்லது தாக்குதல்களுக்கு எதிராக சட்டத்தின் பாதுகாப்பிற்கான உரிமை அனைவருக்கும் உண்டு.

UDHR இல் குறிப்பிடப்பட்டுள்ள உரிமைகள் பின்வரும் இரண்டுசமவாயங்களைக் கொண்ட சர்வதேச உரிமைகளின் சட்டத்தினால் (International Bill of Rights) மேலும் விரிவுபடுத்தப்பட்டுள்ளன:

- **ICCPR - சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச சமவாயம்**
- **ICESCR - பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகளுக்கான சர்வதேச சமவாயம்**

உங்களுடைய அடிப்படை உரிமைகள் மீறப்பட்டால், ஒரு தீர்வை நாடி நீங்களே அல்லது ஒரு சட்டத்தரணி மூலமாக உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யலாம். நீங்கள் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் (HRCSL) ஆதரவையும் நாடலாம். மனித உரிமை மீறல்களுக்கான ஒரு தீர்வை நாடுவது பற்றி பின்வரும் அமர்வுகளில் விரிவாக கலந்துரையாடப்படும்.

**சுருக்கம்:**

மனித உரிமைகள் சர்வதேச சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளன. அடிப்படை உரிமைகள் என்பவை இலங்கை அரசியலமைப்பின் மூன்றாவது அத்தியாயத்தில் உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ள சில சிவில் மற்றும் அரசியல் உரிமைகளாகும். பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகளை இலங்கை அரசியலமைப்பின் 27 வது உறுப்புரையிலுள்ள ‘அரச கொள்கை மற்றும் அடிப்படை கடமைகளின் வழிகாட்டுதல் கோட்பாடுகளில்’ காணலாம். அவை அரசியலமைப்பின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட முடியாதவை என்பதோடு சட்டத்தை இயற்றுதல் மற்றும் நடைமுறையிலுள்ள அந்த கோட்பாடுகளை சேர்ப்பதற்கான நோக்கத்தை மட்டுமே பிரதிபலிக்கின்றன.

மனித உரிமைகள் முக்கியமானவையாகும், ஏனென்றால் அவை நம் அனைவருக்கும், குறிப்பாக துஷ்பிரயோகம், புறக்கணிப்பு மற்றும் தனிமைப்படுத்தல் போன்றவற்றுக்கு முகங்கொடுக்கின்ற அனைவருக்கும் பாதுகாப்பை வழங்குகின்றன. இந்த உரிமைகள் எங்களுக்கு அதிகாரத்தை வழங்குவதோடு, ஒரு அரச அதிகாரியிடமிருந்து கிடைக்கின்ற மோசமான

நடத்துகையை எதிர்த்துப் பேசவும் மற்றும் அதனை சவால் விடுக்கவும் உதவுகின்றன.

## இணைப்பு (Annex)

1. மெர்வின் ஒரு மாற்றுப்பாலின செயற்பாட்டாளர் (transgender activist). அவர் அவருடைய காதலி ரோஷ்னியுடன் பிலியந்தலையில் ஒன்றாக வாழ்ந்து வருகின்றார். தன்பாலீர்ப்பு வெறுப்புணர்வு (Homophobia), மாற்றுப்பாலின வெறுப்புணர்வு (Transphobia) மற்றும் இருபாலீர்ப்பு வெறுப்புணர்வு (Biphobia) போன்றவற்றுக்கு எதிரான சர்வதேச தினத்திற்காக, மெர்வின் ஒரு செய்தியாளர் மாநாட்டில் பேசி, மிகவும் அதிகமாக transphobicல் ஆன செய்திகளை கொண்ட One Country Movement என்கின்ற ஒரு வளர்ந்துவருகின்ற இளைஞர் அரசியல் குழுவை விமர்சித்தார். One Country Movement இன் தலைவரான மாலன், பல்கலைக்கழகத்தில் மெர்வினுடைய ஒரு வகுப்புத்தோழனாக இருந்திருக்கின்றார். மேலும் அவர் மது அருந்துவதற்காக மெர்வினுடைய வீட்டிற்கு ஒருமுறை வந்துள்ளார். எனவே, மெர்வின் எங்கு வசிக்கின்றார் என்பது மாலனுக்கு தெரியும். மெர்வினுடைய செய்தியாளர் மாநாட்டினால் கோபமடைந்த மாலன், மறுநாள் இரவு ஒரு குண்டர் குழுவை மெர்வினுடைய வீட்டிற்கு அனுப்புகின்றார். குண்டர்கள் மெர்வினை அடித்து, ரோஷ்னியை பாலியல் பலாத்காரம் செய்கின்றார்கள். மேலும் மெர்வினுடைய கணினியை எடுத்துக்கொண்டு, அவரது கணினி கடவுச்சொல்லை தருமாறும் வற்புறுத்துகின்றனர்.

2. தன்பாலீர்ப்புள்ள ஆணான (gay) சரத் தனியாக வசிக்கின்றார். அவருக்கு 70 வயதாகின்றது. ஒரு நாள் அமல் மற்றும் கமல் என்கின்ற இரண்டு இளைஞர்கள் அவருடைய வீட்டிற்குள் புகுந்து, ஒரு மதிப்புமிக்க கடிகாரத்தை திருடுகின்றார்கள். சரத் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்கிறார். சரத்தினுடைய வீட்டிற்குள் புகுந்த இருவரையும், சரத்தையும் அடுத்த நாள் பொலிஸ் நிலையத்திற்கு பொலிசார் அழைக்கின்றனர். கமலின் மூத்த சகோதரர், பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் (OIC) நெருங்கிய நண்பராவார். கமலின் சகோதரர் OICஉடன் தொடர்பு கொண்டு, கமல் ஒரு சிறிய பிரச்சனையில் சிக்கியிருப்பதாகவும், அதை சரி செய்யுமாறும் கூறுகின்றார். அமலும் கமலும் பொலிஸ் நிலையத்திற்கு வநது, சரத் தான் தங்களை வீட்டிற்குள் அழைத்து, பாலியல்ரீதியாக நடந்துகொண்டதாக கூறுகின்றனர். தாம் அதனை மறுத்து வெளியேறியபோதும் எதையும் எடுத்துக்கொள்ளவில்லை எனவும் கூறுகின்றனர். அந்த இருவர் சொல்வது தான் உண்மை போல் தெரிகின்றது என்று சரத்திடம் போலீசார் கூறுகின்றனர். முறைப்பாட்டை எழுதுமாறு சரத் பொலீசாரிடம் கேட்கின்ற பொழுது, அவர்கள் மறுத்துவிடுகின்றனர்.

3. சவானி கொழும்பிலுள்ள கல்வித் திணைக்களத்தில் பணிபுரிகின்றார். அவர் தன்பாலீர்ப்புள்ள ஆணாக (gay) இருக்கின்றார். 40 வயதான அவர் அவருடைய பெற்றோருடன் வசித்துவருகின்றார். எவ்வளவு கடினமாக உழைத்தாலும், அவருக்கு பதவி உயர்வு கிடைக்கவில்லை. ஒரு பதவி உயர்வுக்கு அடுத்த இடத்தில்தான் அவர் இருக்கின்றார் என்பது அவருக்கு தெரியும். இருப்பினும், அவர் பதவி உயர்விற்கு கருத்திற்கொள்ளப்பட மாட்டார் என்று அவர் தெரிந்துகொள்கின்றார். அவர் அவருடைய மேற்பார்வையாளரான மாலனியை அணுகி, தன்னை ஏன் பதவி உயர்வுக்கு கருத்திற்கொள்ளவில்லை என்று கேட்கின்றார். சவானி தன்பாலீர்ப்புள்ளவர் என்பதால், அவருக்கு ஒரு பதவி உயர்வை கொடுப்பது ஒரு புதிய கலாசாரத்தை ஊக்குவிப்பது போல தோற்றமளிக்கும் என்றும் அது திணைக்களத்திற்கு நல்லதல்ல என்றும் மாலனி விளக்குகின்றார்.

4. சியான் இலங்கையிலுள்ள அரச பாடசாலைகளில் ஒன்றில் கற்கின்ற 14 வயது மாணவன். வகுப்புத்தோழனான ராமன் மீது அவனுக்கு ஈர்ப்பு உண்டு. ஒரு நாள் சியான் ராமனுக்கு ஒரு காதல் கடிதம் எழுதுகின்றான், அது பாடசாலை ஆசிரியரால் கண்டுபிடிக்கப்படுகின்றது. ஆசிரியர் அதை அதிபரிடம் கொடுக்கின்றார். அதிபர் சியானுடைய பெற்றோரை பாடசாலைக்கு வரவழைத்து, அவனை பாடசாலையிலிருந்து நீக்குமாறு கூறுகின்றார். சியானுடைய தாய் ஒரு சட்டத்தரணி, அவர் சியானை பாடசாலையிலிருந்து நீக்குவதற்கு விரும்பவில்லை. உண்மையில், இது ஒரு அடிப்படை உரிமை (FR) மீறலாக இருக்கின்றது என்று அவர் நினைத்து தக்க நடவடிக்கை எடுக்கப்போகின்றார்.

5. ஜெனெல்லே ஓர் இளம் திருநங்கை (transwoman). ஒரு நாள், அவள் வேலைக்கு செல்கின்ற பொழுது, ஒரு வழக்கமான சோதனைச்சாவடியில் அவளுடைய வாகனத்தை போலிசார் நிறுத்துகின்றார்கள். அவளுடைய சாரதி அனுமதிப்பத்திரத்தில் அவளுடைய பெயர் ஜேசன் என்றும், பால் ஆண் என்றும் இருப்பதை கண்ட பொழுது, 'ஆள்மாறாட்டம் செய்து ஏமாற்றியதற்காக' அவர்கள் அவளை கைதுசெய்கின்றார்கள். அவளை பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச்சென்றவுடன், 2 அதிகாரிகள் அவள் சமூகத்திற்கு ஓர் அச்சுறுத்தல் என்று அவளை திட்டுகின்றார்கள். ஓர் அதிகாரி 'அவளுடைய மார்பகங்கள் உண்மையானவையா என்று பார்ப்பதற்காக' அவற்றை அழுத்துகின்றார்.

# அமர்வு 02: குற்றவியல் குற்றங்களுக்கான தீர்வு

*ஸ்லைடுகளின் உதவியுடனான விரிவுரை*

## நேரம்

1 மணித்தியாலம்

## இலக்கு குழு

அனைத்து குழுக்களும்
ஏறத்தாழ ஒரு குழுவில் 30 பங்கேற்பாளர்கள்

## குறிக்கோள்கள்

இந்த அமர்வின் முடிவில், பங்கேற்பாளர்களால்:

- அவர்கள் ஒரு குற்றவியல் குற்றத்திற்கு முகங்கொடுத்தால் பின்பற்ற வேண்டிய செயன்முறையை சுருக்கமாக விவரிக்க முடியும்.
- இலங்கையின் நீதிமன்ற முறைமை பற்றிய அடிப்படைகளை அறிந்துகொள்ள முடியும்.
- மத்தியஸ்தம் பற்றிய அடிப்படைகளை நினைவுகூற முடியும்.

## தேவையான கருவிகள்

- பல்லூடக எறியி (multimedia projector) மற்றும் திரை (screen)

## தயாரிப்பு

- ஸ்லைடுகள்

## படிமுறைகள்

- இந்த அமர்வில், பங்கேற்பாளர்கள் ஒரு குற்றவியல் குற்றத்தைப் பொறுத்து ஒரு தீர்வை பெற்றுக்கொள்ளக்கூடிய இரண்டு முக்கிய முறைகளை கற்றுக்கொள்வார்கள் என்பதை விளக்கவும்:

  **1) ஒரு நீதித்துறை தீர்வை அணுகுதல், மற்றும்**
  **2) மத்தியஸ்தம்.**

- ஸ்லைடுகளின் உதவியுடனான விரிவுரையை நடாத்தவும்.
- விளக்கக்காட்சியின் பொழுது, பங்கேற்பாளர்களுக்கு கேள்விகளை கேட்பதற்கான நேரத்தை கொடுக்கவும்.
- பங்கேற்பாளர்களை ஈடுபடுத்துவதற்கு கேள்விகளை பயன்படுத்தவும்; உதாரணமாக 'நீங்கள் ஒரு முறைப்பாட்டை செய்வதற்காக பொலிஸ் நிலையத்திற்கு செல்கின்ற பொழுது நீங்கள் எதனை எடுத்துச்செல்ல வேண்டும் என நினைக்கின்றீர்கள்?',

'மத்தியஸ்தத்திற்கு பரிந்துரைக்கப்படக்கூடாத வழக்குகள் ஏதேனும் இருப்பதாக நீங்கள் நினைக்கின்றீர்களா?', 'குற்றத்தால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளை அரசு எவ்வாறு பாதுகாக்க வேண்டும் என்று நீங்கள் நினைக்கின்றீர்கள்?' போன்ற கேள்விகளை நீங்கள் வினவலாம்.


- முன்வைப்புக்கான குறிப்புகளை கீழே உள்ள 'குறிப்புகள்' பிரிவில் காணலாம்.

## குறிப்புகள்

### குற்றத்திற்கான தீர்வு: ஒரு நீதித்துறை தீர்வினை அணுகுதல்

இலங்கையில் நீங்கள் ஒரு குற்றவியல் குற்றத்திற்கு உட்படுத்தப்பட்டால், உங்களால் நீதிமன்ற முறைமையின் மூலம் ஒரு தீர்வினை நாட முடியும்.

**இலங்கையின் நீதிமன்ற முறைமை**




இலங்கையின் நீதிமன்ற முறைமையின் படிநிலையானது 1978 ஆம் ஆண்டு 2 ஆம் இலக்க நீதித்துறை சட்டத்தின், பிரிவு 2 இன் மூலம் நிறுவப்பட்டுள்ளது. மேல் நீதிமன்றங்கள் வரையறுக்கப்பட்ட மற்றும் குறிப்பிட்ட வழக்குகளுக்கு மேன்முறையீட்டு மற்றும் மீளாய்வு அதிகார வரம்பை செயற்படுத்துகின்ற பொழுது, இந்த சட்டபூர்வமாக பொறிக்கப்பட்ட படிநிலையானது முதன்மை நீதிமன்றங்கள், நீதவான் (magistrate) நீதிமன்றங்கள், மாவட்ட நீதிமன்றங்கள் மற்றும் மேல் நீதிமன்றங்கள் போன்றவற்றை முதலாவது எடுத்துக்காட்டு நீதிமன்றங்களாக அமைக்கின்றன. மேன்முறையீட்டு நீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றம் ஆகியவை மேன்முறையீட்டு நீதிமன்றங்களாகும்.

குற்றவியல் சட்டம் சம்பந்தப்பட்ட வழக்குகளில், ஒரு நீதவான் (magistrate) நீதிமன்றம் அல்லது ஒரு மேல் நீதிமன்றம் முதன்மை அதிகார வரம்பை கொண்ட ஒரே நீதிமன்றங்களாகும்; ஒவ்வொன்றிற்குமான அவ்வந்த சட்டக் களங்கள் குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை சட்டக்கோவையில் வழங்கப்பட்டுள்ளன.

பெரும்பாலான குற்றவியல் சட்ட வழக்குகள் நீதவான் (magistrate) நீதிமன்றத்தில் தொடங்கப்படுகின்றன. இந்த வழக்குகள் எந்தவொரு பொலிஸ் அதிகாரியால், அல்லது பொது ஊழியரால், நீதவானுக்கு (magistrate) ஒரு எழுத்து மூலமாக அல்லது வாய்மொழி மூலமாக அளிக்கப்படுகின்ற புகாருடன் தொடங்கப்படுகின்றன.

கொலை வழக்குகள் மற்றும் அரசுக்கு எதிரான பல்வேறு குற்றங்கள் ஒரு மேல் நீதிமன்றத்தில் தொடங்குகின்றன.

பெரும்பாலான சிவில் விவகாரங்களில் ஆரம்ப அதிகார வரம்பானது சம்பந்தப்பட்ட மாவட்ட நீதிமன்றத்தில் இருக்கின்றது.

மேன்முறையீட்டு நீதிமன்றமானது (The Court of Appeal) அனைத்து ஆரம்ப நீதிமன்றங்களின் தீர்ப்புக்கள் அல்லது சட்டத்திலுள்ள அனைத்து பிழைகளையும் திருத்துவதற்கான முதலாவது மேன்முறையீட்டு நீதிமன்றமாகும். எந்தவொரு உத்தரவு, தீர்ப்பு, ஆணை அல்லது தண்டனையை உறுதிப்படுத்துவதற்கு, மாற்றியமைப்பதற்கு, சீர்செய்வதற்கு, அல்லது புதிதாக மாற்றியமைப்பதற்கு அதன் அதிகார வரம்பை பயன்படுத்தி, மேன்முறையீட்டு நீதிமன்றம் (the Court of Appeal) முதலாவது எடுத்துக்காட்டான ஒரு நீதிமன்றம், தீர்ப்பாயம், அல்லது பிற நிறுவனத்திற்கு வழிகாட்டுதல்களை வழங்கலாம். அல்லது இதற்கு மேலதிகமாக மேன்முறையீட்டு நீதிமன்றம் புதிய விசாரணைக்கு அல்லது விசாரணைகளுக்கு உத்தரவிடலாம்.

உயர் நீதிமன்றம் என்பது மிகவும் உயர்ந்ததும் இறுதியானதுமான நீதிமன்றமாகும், மேலும் இறுதி சிவில் மற்றும் குற்றவியல் மேன்முறையீட்டு அதிகார வரம்பைகொண்டது. மற்றும் அரசியலமைப்பு மற்றும் அடிப்படை உரிமைகளுக்கு எதிரான நிர்வாக மற்றும் சட்டமன்ற நடவடிக்கைகளை மீளாய்வு செய்வதற்கான அதிகார வரம்பையும் உடையது.

மேலும் படிக்க:
https://roar.media/english/life/reports/cogs-of-democracy-sri-lankas-court-system

## ஒரு குற்றவியல் குற்றத்தை பற்றி பொலிசாருக்கு முறைப்பாடு செய்தல்

இலங்கையில் நீங்கள் வெறுத்தல் குற்றம் போன்ற SOGIESC அடிப்படையிலான குற்றம் உட்பட ஒரு குற்றவியல் குற்றத்திற்கு உட்படுத்துவதானால், முதலாவது படிமுறையாக பொலிசாரிடம் ஒரு முறைப்பாட்டை அளிக்க வேண்டும். ஒவ்வொரு நாளும் பொலிஸ் நிலையம் 24 மணி நேரமும் திறந்திருக்கின்றது.

SOGIESCஐ பொருட்படுத்தாமல் இலங்கை பொலிஸில் ஒரு முறைப்பாட்டை அளிப்பதற்கான உரிமை அனைவரும் உள்ளது.
வழக்கமாக, குற்றம் நடந்த பகுதியிலுள்ள அதிகாரமளிக்கப்பட்ட பொலிஸ் நிலையத்திற்கு கட்டாயம் முறைப்பாடு செய்யப்பட வேண்டும் (அதாவது, உங்களுடைய முறைப்பாடு குற்றம்/ மீறல் ஏற்பட்ட பகுதியின் அருகிலுள்ள பொலிஸ் நிலையத்திற்கு அளிக்கப்பட வேண்டும்).

பொலிஸ் நிலையத்தை வந்தடைந்தவுடன், பேசி, உங்களுடைய முறைப்பாட்டினது தன்மையை விளக்கவும். பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி (OIC) உங்களுடைய குறிப்பிட்ட வகையான முறைப்பாட்டை எடுத்து (உதாரணமாக திருட்டை பற்றிய ஒரு முறைப்பாடு என்றால், நீங்கள் குற்றவியல் புலன்விசாரணைகள் பிரிவுக்கு அனுப்பப்படுவீர்கள் போன்றவை) அவசியமான விடய பிரிவிற்கு (Subject Division) உங்களுக்கு கட்டாயம் வழிகாட்ட வேண்டும்.

முறைப்பாட்டினை மேற்கொள்கின்ற பொழுது, ஒருவர் பின்வருவனவற்றை வழங்க முடியும்;

- உங்களை அடையாளம் காணவும் (முழு பெயர், தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் (NIC Number), வயது, தொழில், வதிவிடம், தொடர்பு விவரங்கள்)
- நேரம், திகதி, சம்பவ இடம்
- குற்றம் சாட்டப்பட்டவரை விவரிக்கவும் (கிடைக்கக்கூடிய விபரங்கள், பெயர், பாலினம், வயது, தொழில்/ பதவி)
- குற்றச்சாட்டை விவரிக்கவும் (உதாரணமாக பாலியல் துன்புறுத்தல், என்ன வகையான துன்புறுத்தல், அதை நீங்கள் உணரும்படியாக அவர்கள் என்ன செய்தார்கள்)
- நீங்கள் நாடுகின்ற வழி என்ன (நீதிமன்றம் செல்வதற்கான, தீர்விற்கான, இழப்பீட்டிற்கான விருப்பம் போன்றவை)

ஒரு முறைப்பாட்டை செய்தவுடன், உங்களுடைய முறைப்பாட்டை எடுத்துக்கொள்கின்ற அதிகாரியிடமிருந்து பின்தொடர்வதற்கான வழிமுறைகளை நீங்கள் கட்டாயம் பெற வேண்டும்; மற்றும் அவர்களுடைய அறிவுறுத்தல்களை குறிப்பெடுக்க வேண்டும். முறைப்பாட்டின் ஒரு பிரதியை பெறுவதற்கு உங்களுக்கு உரிமையுண்டு (உதாரணமாக தேசிய ஆளடையாள அட்டை (NIC), சாரதி அனுமதிப்பத்திரம் போன்றவை விடுபட்டதாக முறைப்பாடு செய்தல்).

- நிலையப் பொறுப்பதிகாரி (OIC) தேவையற்ற தாமதமின்றி சம்பவ அறிக்கையை வழங்குவதற்கு கடமைப்பட்டவராவார்.
- மற்றபடி, அது பிற்கால, விசாரணை திகதியில் பொய்யான ஆதாரத்தை தூண்டக்கூடும் என்பதால் உங்களுக்கு ஒரு பிரதி வழங்கப்படாது (குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை பிரிவு 444).
- முறைப்பாட்டின் ஒரு பிரதியை பெறுவதற்கு குற்றம் சாட்டப்பட்டவருக்கு உரிமை உண்டு.

இலங்கை காவல்துறை குடிமக்களின் புகார்களை மறுக்க முடியாது. அப்படி மறுக்கப்பட்டால், உதவி பொலிஸ் அத்தியட்சகர் (ASP) ஒரு சந்திப்பை கோருமாறு நீங்கள் அறிவுறுத்தப்படுகின்றீர்கள்.
பொலிசாரால் தவறுகள் ஏற்பட்டால், இலங்கை பொலிஸ் நடவடிக்கைகள் குறித்து நீங்கள் ஒரு முறைப்பாட்டனை மேற்கொள்ள விரும்பினால்;

- ஒரு பொலிஸ் அதிகாரியின் அல்லது பொலிஸ் சேவையின் செயலால் பாதிக்கப்பட்ட எந்தவொரு நபரும் பொது முறைப்பாடுகள் விசாரணை

பிரிவு (PCID) அல்லது தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் ஏதேனும் மாகாண அலுவலகங்களில் ஒரு புகாரை செய்யலாம்.

- ஒவ்வொரு மாகாணத்திற்கும் மாகாண அலுவலகத்தால் பெறப்படுகின்ற பொது முறைப்பாடுகள் மீதான விசாரணைகளுக்கு பொறுப்பாக இருக்கும் ஒரு மாகாண பணிப்பாளர் நியமிக்கப்படுவார். ஆணைக்குழுவிலுள்ள PCID பணிப்பாளருக்கு அவர் நேரடியாக அறிக்கையிடுவார்.
- ஒரு பொலிஸ் அதிகாரிக்கு அல்லது பொலிஸ் சேவைக்கு எதிராக பெறப்பட்ட எந்தவொரு பொது முறைப்பாடும் ஒரு வாரத்திற்குள் ஒரு அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் ஒப்புக்கொள்ளப்படும்.

ஒரு முறைப்பாட்டை அளிக்க பொலிஸ் நிலையத்திற்கு செல்கின்ற பொழுது, சட்ட ஆலோசகரை உங்களுடன் அழைத்துச்செல்லுமாறு அறிவுறுத்தப்படுகின்றது.

## பாலியல் வன்முறைக்கு எதிராக முறைப்பாடு செய்தல்

பாலியல் வன்புணர்வு/ பலாத்காரம் உள்ளிட்ட பாலியல் வன்கொடுமைகள் குறித்து ஒரு முறைப்பாட்டை செய்வதாக இருந்தால், விரைவில் பொலிஸ் நிலையத்திற்கு செல்வது நல்லது. குற்றத்தால் உங்களின் மீது படிந்துள்ள மரபணு (DNA) மற்றும் பிற உடலியல் ஆதாரங்களை பாதுகாப்பதற்கு உங்களுடைய பற்களை துலக்கவோ, குளிக்கவோ அல்லது உடைகளை மாற்றவோ கூடாது. ஏதேனும் காயங்கள் ஏற்பட்டிருந்தால், பொலிசார் உங்களை மருத்துவமனைக்கு அழைத்துச்செல்வார்கள்.

பாதிக்கப்பட்டவரின் வழக்கு தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கு பொலிசார் ஆதாரங்களை சேகரிக்க வேண்டும். மருத்துவ பரிசோதனைகள், கைரேகைகள், மரபணு (DNA) சோதனைகள் போன்றவை ஆதாரங்கள் சேகரிப்பில் அடங்கும்.

மேலும் படிக்க:
https://gic.gov.lk/gic/index.php/en/component/info/?id=479&catid=31&task=info

## சட்ட உதவி பெறுதல்

ஒரு நாட்டின் பாதிக்கப்படக்கூடிய குழுக்களுக்கான சட்ட உதவி என்பது நீதி நிர்வாகத்தின் ஒரு முக்கிய பிரிவாக இருக்கின்றது.

இலங்கை சட்ட உதவி ஆணைக்குழு (LAC) இந்த முக்கியமான தேவையை பூர்த்தி செய்யும் பல்வேறுபட்ட நிறுவனங்கள் (institutions) மற்றும் அமைப்புக்கள் (organizations) மத்தியில் முதன்மையானதாகும். சட்ட உதவி ஆணைக்குழு 1978 ஆம் ஆண்டின் 27ஆம் இலக்க சட்டத்தின் மூலம் ஸ்தாபிக்கப்பட்டது மற்றும் தற்பொழுது அது தலைமை அலுவலகம் அமைந்துள்ள கொழும்பு மத்திய நிலையம் (Colombo Centre) உட்பட நாடளாவிய ரீதியில் 84 மத்திய நிலையங்களைக் கொண்டுள்ளது.

1978 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க சட்ட உதவிச்சட்டமானது, நாட்டிலுள்ள அனைத்து "தகுதியுள்ள நபர்களுக்கும்" ஆணைக்குழு சட்ட உதவிகளை வழங்க

வேண்டும் எனக் கூறுகின்றது. பிராந்திய சட்டத்தரணிகள் சங்கங்களில் (Regional Bar Associations) இருக்கின்ற 120 இற்கும் மேற்பட்ட நிரந்தர சட்ட அதிகாரிகள் மற்றும் 1000 இற்கும் மேற்பட்ட குழுவாக இயங்கும் வழக்கறிஞர்களுடனான சட்ட உதவி ஆணைக்குழுவானது இலங்கையில் சமநீதிக்கான அணுகலை கையாளுகின்ற பிரதானமான நிறுவனமாகும்.

சட்ட உதவி ஆணைக்குழு நாட்டிலுள்ள எந்தவொரு நபருக்கும் அவர்களுடைய வருமான அளவை பொருட்படுத்தாமல் இலவச சட்ட ஆலோசனைகளை வழங்குகின்றது. எந்தவொரு நபரும் வாரநாட்களில் மு.ப 8.30 மணி முதல் பி.ப 4.15 மணி வரை இலவச சட்ட ஆலோசனையை LACயின் தலைமை அலுவலகத்திலோ அல்லது பிராந்திய மத்திய நிலையங்களிலோ பெறலாம்.

எவ்வாறாயினும், சட்ட உதவி ஆணைக்குழுவின் மத்திய நிலையங்களின் முக்கிய கவனம் வழக்காடுதலாக இருக்கின்றது. 'தகுதியுள்ள நபர்களுக்கு' சட்ட உதவி கொடுக்கப்படுகின்றது: 'தகுதியுள்ள நபர்' என்கின்ற சொல் சட்டத்தில் வரையறுக்கப்படவில்லை. மேலும் சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட சோதனைகளை பயன்படுத்தி LACஆல் விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது –
வருமான வரம்பு தேர்வு (Means Test): 'வருமான வரம்பு தேர்வின்' கீழ் வருகின்ற தகுதியுள்ள நபர்கள் எனப்படுவோர் ஒரு மாத வருமானமாக ரூ. 25,000.00 அல்லது அதற்கும் குறைவாக பெறுகின்ற நபர்களாவர். வருமான அளவு அப்பகுதியின் கிராம உத்தியோகத்தரால் சரிபார்க்கப்பட வேண்டும். தகுந்த சந்தர்ப்பங்களில், ஒரு அங்கீகரிக்கப்பட்ட மற்றும் தொடர்புடைய மத்திய நிலையத்தின் பணிப்பாளரோ அல்லது சட்ட அதிகாரியோ, மாதத்திற்கு ரூ. 25,000.00 ற்கு மேல் வருமான அளவு இருக்கின்ற ஆதரவற்ற நபர்களுக்கு சட்ட உதவி வழங்குவதில் நெகிழ்வுத்தன்மையுடன் இருக்க வேண்டும்.

இந்தச்சூழலில் ஒரு குடும்பத்தின் தந்தையின் வருமானம் ரூ. 25,000.00 அல்லது அதற்கும் அதிகமாக இருந்தாலும், அவருடைய மனைவி, மகன், மகள் அல்லது குடும்பத்திலுள்ள மற்றைய உறுப்பினரும் சட்ட உதவியை நாடலாம். சட்ட உதவி வழங்குவதில் தனிநபரின் வருமானம் கருத்திற்கொள்ளப்படுகின்றது.

நீதித்தேர்வு:
ஒரு குழு அல்லது ஒரு பரந்த அளவிலான நபர்களை பாதிக்கின்ற வகையில் தனிப்பட்ட தகராறுகளின் தீர்ப்பை வழக்காடுதலின் வரம்பு மீறுகின்ற பொழுது, சட்ட உதவி வழங்குவதற்கு நீதித்தேர்வு பயன்படுத்தப்படும்.

பராமரிப்பு வழக்குகளில் பெண்களுக்கான சிறப்பு அந்தஸ்து: வருமானம்/ நிதி நிலைமையை பொருட்படுத்தாமல், அவர்களுக்கும் அவர்களுடைய குழந்தைகளுக்கும் பராமரிப்பை நாடுகின்ற அனைத்து பெண்களுக்கும் சட்ட உதவி கிடைக்கும்.

செயன்முறை: நீங்கள் ஒரு 'தகுதியுள்ள நபராக' இருந்தால், உங்களுடைய குறையை பிராந்திய சட்ட உதவி அலுவலகத்திற்கு தெரிவித்தவுடன், ஒரு வழக்கு

பணியாளர் (case worker), பெரும்பாலும் ஒரு சட்டத்தரணியே உங்களுடைய விடயம் தொடர்பாக நியமிக்கப்படுவார். வழக்கு வழக்காடுதலுக்கு சென்றாலும், அனைத்து நீதிமன்ற செலவுகளும் சட்ட உதவி அலுவலகத்தால் மேற்கொள்ளப்படும், மற்றும் அவர்கள் உங்கள் சார்பாக நீதிமன்றத்தில் உங்களுடைய விடயத்தை பிரதிநிதித்துவப்படுத்துவார்கள்.

## குற்றத்தால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளின் பாதுகாப்பு

2015 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க குற்றத்தால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளின் உதவி மற்றும் பாதுகாப்புச்சட்டம், குற்றத்தால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளை பாதுகாப்பதற்கு அவர்களுக்காக தேசிய அதிகாரசபையினை நிறுவுமாறு பரிந்துரை செய்கிறது. இவ் அதிகாரசபையானது இல.428/ 11A, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்லை என்ற முகவரியில் அமைந்துள்ளது[1].

இச்சட்டத்தின்படி "குற்றத்தால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளின் உதவி மற்றும் பாதுகாப்புப்பிரிவை" நிறுவிப் பராமரிக்க வேண்டும் என்கிற சட்ட ஏற்பாடு உள்ளது. மேலும் இச் சட்டத்தின் பிரிவு 19(2) ஆனது சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஒருவர் (Senior Superintendent of Police) பிரிவின் பொறுப்பாளராக நியமிக்குமாறு கூறுகிறது.

ஒரு அரசின் நீதி முறைமையின் முறையான இயக்கத்துக்கு பாதிக்கப்பட்டவர்கள் தங்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட குற்றங்கள் தொடர்பில் முறைப்பாடு செய்வதற்கும் சாட்சிகள் அவர்கள் பார்த்ததை முழுமையாகவும் பாரபட்சமின்றியும் தெரிவிப்பதற்கும் விருப்பத்துடன் முன்வருவதும் தகவல்களை வழங்குவதும் மிகவும் முக்கியம் என்பது வலியுறுத்தப்படுகிறது. பாதிக்கப்பட்டவர்களும் சாட்சிகளும் அச்சுறுத்தலுக்கு ஆளாகி, முன்வருவதற்கான அவர்களது விருப்பத்தையும் திறனையும் குறைமதிப்பிற்கு உட்படுத்துகின்ற நிலையில், ஒட்டுமொத்த சமூகத்தினாலும் நீதி மறுக்கப்படுகின்றது.

## அதிகார சபையின் கடமைகள் மற்றும் செயற்பாடுகள்;

சட்டத்தின் 11 வது பிரிவின் கீழ் நிறுவப்பட்ட அதிகார சபையின் கடமைகள் மற்றும் செயற்பாடுகள்:

- நடைமுறைப்படுத்தல் செயற்பாடுகள்: குற்றத்தால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளின் உரிமைகள் மற்றும் உரிமைகளை அடையாளம் காணுதல், ஊக்குவித்தல், பாதுகாத்தல் மற்றும் விழிப்புணர்வை ஏற்படுத்துதல்;
- பகுதி-நீதித்துறை (Quasi-judicial) செயற்பாடுகள்: குற்றத்தால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளின் உரிமைகள் மற்றும்

[1] https://napvcw.gov.lk/about-us
https://www.moj.gov.lk/index.php?option=com_content&view=article&id=65&Itemid=218&lang=en#

உரிமைகளை மீறுவதை விசாரித்தல், கண்காணித்தல் மற்றும் அரச நிறுவனங்கள், அரச அதிகாரிகள் மற்றும் நீதிமன்றங்களுக்கு பரிந்துரைகளை வழங்குதல்;

- செயற்பாட்டு (Operational) நடவடிக்கைகள்: குற்றத்தால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளின் பாதுகாப்பிற்கு உத்தரவாதம் அளித்தல்;
- ஒழுங்குமுறை செயற்பாடுகள்: வழிகாட்டுதல்களை வழங்குதல் மற்றும் மேற்பார்வை செய்தல்.

போதைப்பொருள் கடத்தல்காரர்களிடமிருந்தோ அல்லது வேறு கடுமையான குற்றவாளிகளிடமிருந்தோ அச்சுறுத்தல் இருக்கக்கூடிய சாட்சிகளுக்கு புதிய அடையாளங்களை வழங்கும் ஒரு பொறிமுறை இலங்கையில் இன்னும் இல்லை.

ஒரு அடையாள அணிவகுப்பில் கலந்துகொள்வதிலிருந்து ஒரு படி பின்வாங்குவதற்கு ஒரு சாட்சி முடிவு செய்தால், தங்களுடைய சொந்த பாதுகாப்பிற்கு பயந்து, பல வெளியாட்களின் பார்வைக்கு வராமல், குற்றம் சாட்டப்பட்டவரை அடையாளம் காண்பதற்கு சாட்சியை ஒரு தனி இடத்தில் தங்க வைப்பதற்கான ஏற்பாடுகள் உள்ளன.

## குற்றத்திற்கான தீர்வு : மத்தியஸ்தம்

மாற்றுப் பிணக்குத் தீர்வு (ADR) முறை என்பது வழக்காடுதல் இல்லாமல் நடுவர், மத்தியஸ்தம் அல்லது பேச்சுவார்த்தை போன்றவற்றின் ஊடாக பிணக்குகளைத் தீர்ப்பதற்கான ஒரு நடைமுறையாகும். அவை அதிக இணக்கப்பாடு (Settlement) சார்ந்தவை. மாற்றுப் பிணக்குத் தீர்வு (ADR) நடைமுறைகள் வழமையாகவே குறைந்த செலவுடைய அதிக வேகமான செயன்முறையாகும்.

மாற்றுப் பிணக்குத் தீர்வு (ADR) நடவடிக்கைகளை தரப்பினர் விரும்புவதற்கான முதன்மை காரணங்களில் ஒன்று, எதிரிடையான வழக்காடுதலை போலல்லாமல், ADR நடைமுறைகள் பெரும்பாலும் ஒத்துழைப்புடன் கூடியனவாக இருப்பதோடு தரப்பினர்களுடைய நிலைப்பாட்டை ஒருவருக்கொருவர் புரிந்து கொள்வதற்கு அனுமதிப்பனவாக இருக்கின்றமை ஆகும். மேலும் மாற்றுப் பிணக்குத் தீர்வு (ADR) நடைமுறையானது ஒரு நீதிமன்றத்தினால் விதிப்பதற்கு சட்டப்பூர்வமாக அனுமதிக்கப்படாத ஆக்கப்பூர்வமான தீர்வுகளை கொண்டுவருவதற்கு தரப்பினர்களை அனுமதிக்கின்றது.

## மத்தியஸ்தம்

மத்தியஸ்தம் என்பது இலங்கையில் பயன்படுத்தப்படுகின்ற பிணக்குகளைத் தீர்ப்பதற்கான் மாற்றுத் தீர்வுகளின் ஒரு வடிவமாகும்.

மத்தியஸ்த சபைகளை நிறுவிய 1988 ஆம் ஆண்டின் 72 ஆம் இலக்க மத்தியஸ்த சபைகள் சட்டமானது இலங்கையில் மத்தியஸ்தம் எவ்வாறு மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதையும் குறிப்பிடுகின்றது. இந்தச்சட்டம் பிணக்குடன் தொடர்புடைய தரப்பினர்களுக்கிடையில் மத்தியஸ்த செயன்முறையின் மூலம் மத்தியஸ்தம் மேற்கொள்ளப்படும் முறையை விளக்குவதோடு, அனைத்து பிணக்குகளையும் தீர்ப்பதற்கான அதிகாரம் பெற்ற, மத்தியஸ்த சபைகளை நிறுவனமயமாக்குவதற்கு தேவையான சட்டக்கட்டமைப்பையும் வழங்குகின்றது.

மத்தியஸ்த சபைகளை நிறுவுவது, சிறு பிணக்குகளை விரைவாக தீர்ப்பதற்கான ஒரு தனித்துவமான வாய்ப்பை வழங்கியுள்ளது, இதில் வழக்காடுதலிற்கான ஒரு மாற்றாக, பிணக்குகளைத் தீர்ப்பதற்கான ஒரு வலுவான பொறிமுறையாக அது செயற்படுகின்றது. தற்பொழுது, நாடு முழுவதும் 329 மத்தியஸ்த சபைகள் உள்ளன. மேலும் சுமார் 8,266 மத்தியஸ்தர்கள் பல ஆண்டுகளாக இழுத்துச்செல்லப்படுகிற பிணக்குகளுக்கு சமாதானமான தீர்வை அடைவதற்கு தன்னார்வ அடிப்படையில் மக்களுக்கு உதவிக்கொண்டிருக்கின்றார்கள்.

மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழு 05 (ஐந்து) உறுப்பினர்களை கொண்டுள்ளது. அவர்களில் மூவர் உயர் நீதிமன்றங்களில் ஓய்வுபெற்ற நீதிபதிகளாக இருக்க வேண்டும். இந்த உறுப்பினர்கள் அனைவரும் ஜனாதிபதியால் நியமிக்கப்படுகின்றார்கள். மத்தியஸ்த குழுச்சபைகளின் நிர்வாக நடவடிக்கைகள் – அதாவது, நியமனம், இடமாற்றங்கள், பணிநீக்கம் மற்றும் ஒழுங்கு கட்டுப்பாடு போன்றவை மத்தியஸ்த சபை ஆணைக்குழுவால் விதிக்கப்படுகின்றன.

தரப்பினர்களுக்கு இடையிலுள்ள சர்ச்சைகளை தீர்ப்பதில் மத்தியஸ்தர்கள் மூன்றாம் தரப்பாக செயற்படுகின்றனர். மத்தியஸ்த குழுச்சபைகளின் செயற்றிறனை அத்தகைய சபைகள் ஆண்டுக்கு பெறுகின்ற சர்ச்சைகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் மதிப்பிடலாம்.

**இலங்கை சட்டத்தின் கீழ், சில குற்றங்கள் - அதாவது** 500,000 **ரூபாய்க்கு குறைவான சொத்து அல்லது கடன் கோரிக்கைகள் மற்றும் காயப்படுத்துதல், மிரட்டல், அத்துமீறல் மற்றும் துஷ்பிரயோகம் போன்ற சிறிய குற்றவியல் குற்றங்கள், நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படுவதற்கு முன்னர் மத்தியஸ்தத்திற்கு பரிந்துரைக்கப்படுவது கட்டாயமாகும். ஒரு தீர்வு அடையப்படாவிட்டால், ஒரு நீதிமன்றத்திற்கு முன்பாக வழக்குகள் விசாரிக்கப்படுவதற்கு சபையால் தீர்வு அல்லாத சான்றிதழ்** (Non-Settlement Certificate) **சமர்ப்பிக்கப்பட வேண்டும்.**

## மத்தியஸ்தத்திற்கு பரிந்துரைக்கக்கூடிய பிணக்குகள்

(குறித்த பிணக்குகள் தொடர்பாக ஏதேனும் நடவடிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதற்கு முன்பாக) மத்தியஸ்தத்திற்காக கட்டாயமாக பரிந்துரைக்கப்பட வேண்டிய பிணக்குகளுக்கும், தரப்பினர்களது விருப்பப்படி தாமாகவே மத்தியஸ்தத்திற்காக முன்வரும் பிற பிணக்குகளுக்கும் இடையிலான வித்தியாசத்தை வேறுபடுத்துவதற்கு சட்டம் முயல்கின்றது. அதேபோன்று பிணக்குளை நீதிமன்றத்தின் மூலம் மத்தியஸ்தம் செய்வதற்கும் வழிவகை உள்ளது.

பிணக்குகளை தீர்ப்பது மட்டுமல்லாமல், அவற்றை தவிர்ப்பதற்குமான ஆற்றலை மத்தியஸ்தம் கொண்டுள்ளது. மத்தியஸ்தம் ஒரு நிலையான சமூகத்தை மற்றும் ஒரு நல்ல பொருளாதார சூழலை பராமரிப்பதற்கு உதவுகின்றது. மத்தியஸ்தம் மூலம் சமூகம், வணிகம் மற்றும் வேலைவாய்ப்பு பிணக்குகளைத் தீர்ப்பதற்கும் பிணக்குடன் தொடர்புடைய தரப்பினர் பிரச்சினைகளுக்கு தங்களுடைய சொந்த தீர்வுகளை கண்டறிவதற்கும், விரோதமான அணுகுமுறையின் காரணமாக காயப்படுத்தப்பட்ட மற்றும் அழிக்கப்பட்ட உறவுகளை மீண்டும் தொடர்வதற்கும் உதவுகின்றது.

மத்தியஸ்தத்தை நாடுவது மற்ற செயன்முறைகளை தொடர்கின்ற உரிமையை இழக்கக்கூடியதான் பாதகமான விளைவுகள் எதனையும் ஏற்படுத்தாது. ஏனெனில் மத்தியஸ்தம் தோல்வியுறும் பட்சத்தில், ஏனைய செயன்முறைகளை தொடர்வதற்கு தர்ப்பினர்களுக்கு உரிமை காணப்படும். தரப்பினர் மத்தியஸ்தத்தில் ஈடுபடுகின்ற பொழுது பரிந்துரைக்கப்பட்ட காலம் இயங்காது என்பதனை இவ் விடயத்துடன் தொடர்புடைய சட்டங்கள் ஏற்றுக்கொள்கின்றன.
மத்தியஸ்த சேவைகளுக்கான அணுகல் உறுதி செய்யப்பட்டு, செயன்முறை எளிதாக தொடங்கப்படுகின்றது.
மத்தியஸ்தம் மிகவும் மலிவானது. இச் செயன்முறையானது முக்கியமானவை என்று தாங்களாகவே அடையாளம் கண்டுள்ள பிரச்சினைகளை தீர்ப்பதற்கும் மற்றும் கையாள்வதற்கும் தரப்பினர்களுக்கு உதவுகின்றது.

## பயிற்சி வழங்குநருக்கான குறிப்பு

- மத்தியஸ்தத்திற்கு பரிந்துரைக்கப்படக்கூடாது என்று பங்கேற்பாளர்கள் நினைக்கின்ற வழக்குகள் ஏதேனும் இருந்தால் அவர்களிடம் கேட்கவும்.
- பிழைத்துவாழ்பவரை/ எஞ்சியிருப்பவரை மிரட்டுதல், பாதிக்கப்பட்டவரை குற்றம் சாட்டுதல் மற்றும் பாலியல் குற்றங்களில் மத்தியஸ்தம் தொடர்பான நடைமுறை சவால்களை பற்றி கலந்துரையாடவும்- கற்பழிப்பு/ பாலியல் வன்புணர்வு போன்ற கடுமையான குற்றவியல் குற்றங்களில் மத்தியஸ்தம் பயன்படுத்தப்படுவதில்லை என்பதை நினைவில் கொள்ளவும்.
- நெருக்கமான இணையர்கள் வன்முறை வழக்குகளில் சமரசம் செய்கின்ற நடைமுறையை பற்றி கலந்துரையாடவும். சில நேரங்களில் IPVஇன் வழக்குகள் மத்தியஸ்த சபைகளுக்கு பரிந்துரைக்கப்படுகின்றன. பெண்களுக்கு எதிரான IPV ஐ தீவிரமாக

எடுத்துக்கொள்ளாதது பிழைத்துவாழ்பவரின்/ எஞ்சியிருப்பவரின் அடிப்படை உரிமையை (FR) மீறுவதாகும் என்பதை விளக்கவும்.

## மத்தியஸ்தத்திற்கு செல்லக்கூடிய பிணக்குகளாக இருப்பவை யாவை?

- விதிவிலக்குகளுக்கு உட்பட்ட விடயங்கள் தன்னார்வமாகவே/ தானாகவே மத்தியஸ்தத்திற்கு பரிந்துரைக்கப்படுகின்றன. ஒரு தரப்பு அரசாக இருந்தால், சர்ச்சையானது அரசு சார்பான, சொத்து, பணம் அல்லது மற்ற கடன்களோடு தொடர்புபட்டிருந்தால் அல்லது சட்டமா அதிபர் (Attorney General) எந்தவொரு குற்றத்திற்காகவும் நடவடிக்கைகளை நிறுவனப்படுத்தியிருந்தால் தன்னார்வ பரிந்துரை அனுமதிக்கப்படாது. குற்றவியல் மற்றும் சிவில் விவகாரங்கள் இரண்டிலுமே கட்டாய பரிந்துரை உள்ளது.

- பாலியல் வன்புணர்வு அல்லது கொலை போன்ற கடுமையான குற்றங்கள் அல்லாதவை – குறிப்பாக சொத்து குற்றங்கள், தாக்குதல், அத்துமீறல் மற்றும் அவதூறு போன்றவை – மத்தியஸ்தம் மூலம் தீர்க்கப்படக்கூடிய குற்றவியல் விவகாரங்கள் என சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

- சொத்து, கடன், அல்லது 500,000 ரூபாய்க்கு உட்பட்ட சேதம் போன்றன இதன் கீழ் சிவில் விவகாரங்களுக்கு உட்பட்டனவாக உள்ளன. மேலும் இது அடிப்படை உரிமைகள் மற்றும் திருமண மோதல்கள் போன்ற விதிவிலக்குகளுக்கு உட்பட்டது.

- தரப்பினர்களின் ஒப்புதலுடன் எந்தவொரு நீதிமன்றத்தின் கீழுள்ள வழக்குகளையும் மத்தியஸ்தத்திற்காக பரிந்துரைக்கலாம். எவ்வாறாயினும், இந்த செயன்முறையில், தரப்பினர்களின் சட்டப் பிரதிநிதிகளை மத்தியஸ்த செயன்முறையில் பங்கேற்கச்செய்வது அனுமதிக்கப்படவில்லை.

## மத்தியஸ்தத்திற்கான விண்ணப்பம் (Application for mediation)

ஒரு மத்தியஸ்தத்திற்கான விண்ணப்பம் பிணக்குடன் தொடர்புடைய எந்தவொரு தரப்பினராலும் அல்லது பிணக்குடன் தொடர்புடைய அனைத்து தரப்பினராலும் ஆரம்பிக்கப்படலாம். மத்தியஸ்தம் செய்யப்படுகின்ற தரப்பினர்களுக்கு இடையில் உடன்படிக்கை இல்லை என்றால், மத்தியஸ்த மத்திய நிலையமானது மத்தியஸ்தத்தைத் தொடர ஒப்புதலை பெறுவதற்கான ஒரு கருத்துடன் தயக்கம் காட்டுகின்ற தரப்புடன் பேச்சுவார்த்தை நடத்தும்.

அனைத்து தரப்பினர்களும் மத்தியஸ்தத்தை தொடர ஒப்புக்கொள்கின்ற இடத்தில், தரப்பினர்கள் மத்திய நிலையத்தின் விதிகளைப் பின்பற்றுவதை ஒப்புக்கொள்வதாலும் மற்றும் மத்தியஸ்தம் நடத்துவதன் மூலம் பரஸ்பரம் ஒத்துழைக்க அவர்கள் உடன்படுவதாலும், மத்தியஸ்தம் செய்வதற்கு ஓர் உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டது. மத்தியஸ்த அமர்வுகளின் செயற்பாட்டில் என்ன நடக்கின்றது என்பதை பொறுத்தவரையில் இரகசியத்தன்மை போன்ற

விதிகள் பின்பற்றப்படுகின்றன. மற்றும் தரப்பினர்கள் தனிநபர் அமர்வுகளில் கலந்துகொள்ள வேண்டும். இங்கு சட்டப்பூர்வமான பிரதிநிதித்துவம் அனுமதிக்கப்படவில்லை. அமர்வுகள் பிரத்தியேகமானவையாக இருக்கின்றன.

### மத்தியஸ்த நடவடிக்கைகள் (Mediation Proceedings)

மத்தியஸ்தர்களின் ஒரு குழுவின் பகுதிக்குள் எழுகின்ற ஒரு சச்சரவைத் தீர்ப்பதற்கு அவர்களுக்கு ஒரு விண்ணப்பத்தை வழங்குவதன் மூலம், பிணக்குடன் தொடர்புடையவர்களின் விருப்பங்களுக்கு ஏற்ப மூன்று உறுப்பினர்களை கொண்டு அமைக்கப்பட்ட குழுவாக ஒரு சபையானது பரிந்துரைக்கப்படுகின்றது. சபையானது பிணக்குடன் தொடர்புடையவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு முன்-வரையறுக்கப்பட்ட ஒன்றாக இருக்கலாம் அல்லது அதன் உறுப்பினர்கள் குழு உறுப்பினர்களுக்கிடையில் தரப்பினர்களின் விருப்பப்படி தனித்தனியாக தேர்ந்தெடுக்கப்படலாம். ஒரு பிணக்கு பற்றிய குறிப்பை பொறுத்து ஒரு சபைக்கான அவசியப்பாடு தீர்மானிக்கப்படுகிறது.

மேலும் படிக்க: http://mediation.gov.lk/static/docs/en/justalternative.pdf

### சுருக்கம்

ஒருவருடைய பாலீர்ப்பு, பாலின அடையாளம் மற்றும் வெளிப்பாடு, அத்தோடு பாலியல் பண்புகள் ஆகியவற்றை பொருட்படுத்தாமல், ஒரு குற்றம் எவருக்கு எதிராக செய்யப்பட்டிருந்தாலும், எந்தவொரு நபருக்கும் ஒரு தீர்வை பெறுவதற்கான உரிமை உண்டு. குற்றத்தை தடுப்பதில் மற்றும் வழக்குத்தொடர்வதில் ஒரு முக்கிய பங்கை பொலிசார் வகிக்கின்றனர். நீங்கள் ஒரு குற்றவியல் குற்றத்திற்கு உட்பட்டிருந்தால், நீங்கள் அருகிலுள்ள பொலிஸ் நிலையத்திற்கு செல்லலாம். ஒரு குற்றவியல் வழக்கை விசாரிப்பது அரசின் பொறுப்பாகும் - ஆகவே, நீங்கள் ஒரு சட்டத்தரணிக்கு பணம் செலுத்த வேண்டியதில்லை. எவ்வாறாயினும், உங்களுடைய SOGIESCஇன் காரணமாக பொலிஸ் நிலையத்தில் உங்களுக்கு பாரபட்சம் காட்டப்படலாம் என்று நீங்கள் பயப்படுகின்றீர்கள் என்றால், ஒரு சட்டத்தரணியை வைத்திருப்பது சிறந்தது.

# அமர்வு 03: ஓர் அடிப்படை உரிமை மீறலுக்கான தீர்வு

ஒரு கலந்துரையாடலை தொடர்ந்து ஒரு செயற்பாடு

## நேரம்

1 மணித்தியாலம்

## இலக்கு குழு

அனைத்து குழுக்களும்
ஏறத்தாழ ஒரு குழுவில் 30 பங்கேற்பாளர்கள்

## குறிக்கோள்கள்

இந்த அமர்வின் முடிவில், பங்கேற்பாளர்களால்;

- இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு (HRCSL) மூலம், உயர்நீதிமன்றத்தின் மூலம், மற்றும் நிர்வாகத்திற்கான குறைகேள் அதிகாரியிடம் (Ombudsman) முறைப்பாடு செய்வதன் மூலம், அடிப்படை உரிமை (FR) மீறல்களுக்கான ஒரு தீர்வின் மூன்று வழிகளில் கோர முடியும்.
- HRCSL மற்றும் உயர்நீதிமன்றத்தில் ஒரு முறைப்பாட்டை மேற்கொள்வது எப்படி என்பதை அறிந்துகொள்ள முடியும்.

## தேவையான கருவிகள்

- பல்லூடக எறியி (multimedia projector) மற்றும் திரை (screen)

## தயாரிப்பு

- ஸ்லைடுகள்

## படிமுறைகள்

• இந்த அமர்வில், அடிப்படை உரிமை மீறல் தொடர்பில் பெறப்படுகின்ற தீர்வின் மூன்று பிரதான வழிகளை பங்கேற்பாளர்கள் கற்றுக்கொள்வார்கள் என்பதை விளக்கவும்:

**1) உயர்நீதிமன்றத்தின் மூலம்**

**2) HRCSL மூலம், மற்றும்**

**3) நிர்வாகத்திற்கான குறைகேள் அதிகாரி (Ombudsman) மூலம்**.

- ஸ்லைடுகளின் உதவியுடனான விரிவுரையை தொடர்ந்தும் நடாத்தவும்.
- முன்வைப்பின் பொழுது, கேள்விகளை கேட்பதற்கு பங்கேற்பாளர்களுக்கு நேரம் வழங்கவும்.
- பங்கேற்பாளர்களை ஈடுபடுத்த கேள்விகளைப் பயன்படுத்தவும்.
- கீழே உள்ள 'குறிப்புகள்' பிரிவில் முன்வைப்புக்கான குறிப்புகள் காணப்படுகின்றன.

## குறிப்புகள்

## அடிப்படை உரிமை (FR) மீறலுக்கான தீர்வு: 01. உயர்நீதிமன்றம்

அரசியலமைப்பின் 126 வது உறுப்புரையின் அடிப்படையில், அடிப்படை உரிமை (FR) மீறல் வழக்குகளை விசாரிக்கவும், நியாயமான தீர்வை வழங்கவும் உயர் நீதிமன்றத்திற்கு அதிகாரம் உள்ளது.

உறுப்புரை 126. (1) அத்தியாயம் III அல்லது அத்தியாயம் IV ஆல் வெளிப்படுத்தப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டதான ஏதேனும் அடிப்படை உரிமையானது அல்லது மொழி உரிமையானது ஆட்சித் துறை நடவடிக்கையால் அல்லது நிருவாக நடவடிக்கையால் மீறப்பட்டமை பற்றிய அல்லது உடனடியாக மீறப்படவுள்ளமை பற்றிய ஏதேனும் பிரச்சினையை விசாரணை செய்வதற்கும் தீர்மானிப்பதற்கும் உயர் நீதிமன்றம் தனியானதும் பிரத்தியேகமானதுமான நியாயாதிக்கம் கொண்டிருத்தல் வேண்டும்.

உறுப்புரை 126.(2) எவரேனும் ஆள், அத்தகைய ஆள் தொடர்பிலான ஏதேனும் அடிப்படை உரிமை அல்லது மொழியுரிமை ஆட்சித்துறை நடவடிக்கையால் அல்லது நிருவாக நடவடிக்கையால் மீறப்பட்டுள்ளதென அல்லது மீறப்படவுள்ளதெனச் சார்த்துமிடடுத்து, அத்தகைய மீறல் தொடர்பில் நிவாரணம் அல்லது பரிகாரம் வழங்குமாறு கோரி, அந்த நிகழ்ச்சி தேதியிலிருந்து ஒரு மாதத்துக்குள் அப்போதைய நடைமுறையில் இருக்கும் அத்தகைய நீதிமன்ற விதிகளுக்கு இணங்க உயர் நீதிமன்றத்திற்கு முகவரியிட்டனுப்பிய எழுத்திலான மனுவொன்றின் மூலம், அவர் தாமாகவோ, அல்லது அவரது சார்பில் சட்டத்தரணி ஒருவர் மூலமாகவோ அத்தகைய நீதிமன்றத்திற்கு விண்ணப்பிக்கலாம். தொடர்ந்து விசாரிக்கப்படுவதற்கான உயர் நீதிமன்றத்தின் அனுமதியை முதலில் கேட்டுப் பெற்ற பின்னரே அவ்விண்ணப்பம் மேற்கொண்டுசெல்லப்படலாம்; அத்தகைய அனுமதி இரண்டு பேர்களுக்கு குறையாத நீதிபதியினால் வழங்கப்படலாம் அல்லது மறுக்கப்படலாம்.

(3) ஆட்கொணர் எழுத்தாணை,உறுதிகேள் எழுத்தாணை, தலையீட்டெழுத்தாணை, ஆணையீட்டெழுத்தாணை, மேட்செல் என்னும் எழுத்தாணை, அல்லது யாதுரிமை எழுத்தாணை என்ற இயல்பினவான கட்டளைகளுக்கான விண்ணப்பம் ஒன்றை மேன்முறையீட்டு நீதிமன்றம் ஒன்றில் விசாரணை செய்கின்றபோது, அத்தகைய விண்ணப்பத்திற்கான கட்சிக்காரரர் ஒருவரால் அத்தியாயம் III அல்லது அத்தியாயம் IV ஏற்பாடுகள் மீறப்பட்டுள்ளன அல்லது உடனடியாக மீறப்படவுள்ளன என்பதற்கு முதற்றோற்றளவிலான சான்று உள்ளது என்று அத்தகைய நீதிமன்றத்திற்கு தோன்றுகின்றவிடத்து, அத்தகைய நீதிமன்றம் உயர்நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்படுவதற்கான அத்தகைய விடயத்தை உடனடியாக ஆற்றுப்படுத்துதல் வேண்டும்.

(4) உயர்நீதிமன்றம், இவ்வுறுப்புரையின் (2) ஆம், (3) ஆம் பந்திகளில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் மனு அல்லது ஆற்றுப்படுத்துகை தொடர்பில் அச்சந்தர்ப்பத்தில் நீதியானதும் ஒப்புரவானதும் என அது கருதக்கூடியவரான அத்தகைய நிவாரணத்தை வழங்குவதற்கு அல்லது அத்தகைய பணிப்புகளை ஆக்குவதற்கு தத்துவம் கொண்டிருத்தல் வேண்டும்; அல்லது அதன் அபிப்பிராயப்படி அடிப்படை உரிமை அல்லது மொழி உரிமை எதுவும் மீறப்படாவிட்டால் அந்தக் கருமத்தை மேல்முறையீட்டு நீதிமன்றத்துக்கு திருப்பியனுப்புதல் வேண்டும்

(5) உயர் நீதிமன்றம், இவ்வுறுப்புரையின் கீழான ஏதேனும் மனுவை அல்லது ஆற்றுப்படுத்துகையை, அத்தகைய மனு கோப்பிடப்பட்ட அல்லது அத்தகைய ஆற்றுப்படுத்துகை செய்யப்பட்ட இரண்டு மாதங்களுக்குள்ளாக அதனை விசாரணை செய்து முற்றாக முடிவு செய்தலும் வேண்டும்.

**ஓர் உடனடி மீறல் (imminent infringement) என்றால் என்ன?**

இதன் பொருள், உயர் நீதிமன்றத்தின் ஊடாக ஒரு தீர்வை அணுகுவதற்கு ஏற்கனவே அடிப்படை உரிமைகள் (FR) மீறப்பட வேண்டிய அவசியமில்லை என்பதாகும். உங்களுடைய உரிமைகள் மீறப்படும் என்று நீங்கள் நம்புவதற்கு நியாயமான காரணம் இருந்தால், நீங்கள் உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யலாம்.

**ஒரு நிறைவேற்று (executive) அல்லது நிர்வாக (administrative) நடவடிக்கை என்றால் என்ன?**

இதன் பொருள், ஓர் அடிப்படை உரிமை (FR) மீறலுக்காக நிறைவேற்று (executive) அல்லது நிர்வாக (administrative) செயற்பாடுகளை செயற்படுத்துகின்ற ஒரு அரச நிறுவனத்தினால் அல்லது அதிகாரத்தினால் உயர் நீதிமன்றத்திடம் மட்டுமே நீங்கள் ஒரு தீர்வை நாட முடியும் என்பதாகும். எவ்வாறாயினும், ஒரு நீதித்துறை நடவடிக்கையின் காரணமாக இருந்தால், ஓர் அடிப்படை உரிமை மீறலுக்காக, ஒருவர் உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்ய முடியாது.

*தயானந்தா vs. வீரசிங்க* [1983] 2 SLR 84

• நீதித்துறை விருப்புரிமையை தவறான முறையில் பயன்படுத்துவதை ஒரு அடிப்படை உரிமைகள் விண்ணப்பத்தில் கேள்வி கேட்க முடியாது என்று உயர் நீதிமன்றம் கூறியது.

*சத்யபாலா vs. சட்டமா அதிபர் SC விண்ணப்ப இல. 40/84, SCM 11.05.84.*

• 126 வது உறுப்புரையின் கீழ் ஜனாதிபதியால் கொண்டுவரப்பட்ட சட்டமானது சவாலுக்குட்படுத்த முடியாதது.

- இலங்கை அரசியலமைப்பின் பத்தொன்பதாவது திருத்தம், ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ நிலையில் செயற்படுகின்ற ஒரு சட்டத்தினால் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டால், உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்வதன் மூலம் 126 ஆவது உறுப்புரையின் அடிப்படையில் ஒரு தீர்வை பெறுவதற்கு மக்களுக்கு உதவியது. இருப்பினும்,

அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தத்தின் மூலம் இது தலைகீழாக மாற்றப்பட்டது.

*பண்டார vs. விக்கிரமசிங்க* [1995] 2 SLR 167

- பாடசாலையொன்றின் பிரதி அதிபர், உப அதிபர் மற்றும் ஓர் ஆசிரியரால் மாணவர் ஒருவர் தாக்கப்பட்டார்.
- நிறைவேற்று (executive) அல்லது நிர்வாக (administrative) நடவடிக்கையின் மூலம் அடிப்படை உரிமைகளை மீறுவதற்கு பதிலளிப்பவர்கள்தான் பொறுப்பென்று நீதிமன்றம் கூறியது.

## நிலையியல் விதி (rule on standing) என்ன?

அதாவது இதன் பொருள், மூன்றாம் தரப்பினர் உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்ய முடியாது என்பதாகும். யாருடைய உரிமைகள் மீறப்படுகின்றதோ அல்லது மீறப்பட இருக்கின்றதோ, அவர்களே (அல்லது ஒரு சட்டத்தரணியின் மூலமாக) உயர்நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யவேண்டும்.

*ஸ்ரீயானி சில்வா vs. இத்தமல்கொட, பியகல பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி* [2003] 3 SLR 63

- பொலிசாரின் சித்திரவதையின் பொழுது ஏற்பட்ட காயங்களினால் இராணுவத்திலிருந்து தப்பியோடிய ஒருவர் உயிரிழந்தார்.
- இறந்த கணவரின் சார்பாக மனுத்தாக்கல் செய்ய இறந்தவரின் மனைவிக்கு உரிமை உண்டு என்று நீதிமன்றம் கூறியது.

*புலாங்குளம vs. செயலாளர், கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு* [2000] 3 SLR 243

- பொஸ்பேட் (phosphate) அகழ்வுக்கான ஒரு முன்மொழியப்பட்ட ஒப்பந்தமானது, குடியிருப்பாளர்களின் சமத்துவத்திற்கான உரிமை, ஒரு சட்டப்பூர்வமான தொழிலில் ஈடுபடுவதற்கான சுதந்திரம் மற்றும் இலங்கையில் ஒரு வதிவிடத்தை தேர்ந்தெடுப்பதற்கான சுதந்திரம் ஆகியவற்றை மீறுவதாக மனுதாரர்கள் தெரிவித்தனர். இந்த வழக்கு ஒரு பொதுநல வழக்காடுதலாக கூட்டாக தாக்கல் செய்யப்பட்டது.
- இந்த வழக்கு பொதுநல வழக்காடுதலில் ஒன்றாக இருப்பதால், மனுதாரர்கள் தகுதி நீக்கம் செய்யப்பட மாட்டார்கள், அத்தோடு அவர்கள் தனித்தனியாக நிற்கின்றார்கள் என்று நீதிமன்றம் கூறியது.

## ஒரு மாத விதி என்றால் என்ன?

அதாவது, இதன் பொருள் அடிப்படை உரிமைகள் (FR) மீறப்பட்ட ஒரு மாத காலத்திற்குள் உயர்நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட வேண்டும் என்பதாகும்.

*சமன் vs. லீலதாச* [1989] 1 SLR 1

- மனுதாரர் டிசம்பர் 1 ஆம் திகதி காவலில் இருந்தபொழுது தாக்கப்பட்டார். பிணையில் விடுவிக்கப்பட்ட அவர் டிசம்பர் 2 முதல் 11 வரை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். அவர் ஜனவரி 7 ஆம் திகதியன்று ஓர் அடிப்படை உரிமைகள் மனுத்தாக்கலை செய்தார்.
- அவர் மருத்துவமனையிலிருந்து வெளியேற்றப்பட்ட பின்புதான் ஒரு மாதம் இயங்கத் தொடங்கியது என்று நீதிமன்றம் கூறியது.

## அடிப்படை உரிமை (FR) மீறலுக்கான தீர்வு: HRCSL
## இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு - (HRCSL)

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு (HRCSL) என்பது 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க மனித உரிமைகள் ஆணைக்குழு சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட ஒரு சுயாதீன ஆணைக்குழுவாகும்.

HRCSL இலங்கையின் அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது, ஆனால் அது அரசியலமைப்பின் மூலம் முறையாக நிறுவப்படவில்லை.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைமை அலுவலகம் கொழும்பில் உள்ளது. நாடு முழுவதும் 10 பிராந்திய அலுவலகங்கள் இருக்கின்றன.

## ஆணைக்குழுவின் செயற்பாடுகள்

- அரசியலமைப்பினால் உத்தரவாதம் அளிக்கப்பட்ட அடிப்படை உரிமைகளின் பாதுகாப்பை மேம்படுத்துதல் மற்றும் கண்காணித்தல்
- இலங்கை அரசு சர்வதேச மனித உரிமைகள் நியமங்களுக்கு இணங்குவதை உறுதிசெய்தல்
- அடிப்படை உரிமை மீறல்கள் அல்லது உடனடி அடிப்படை உரிமை மீறல்கள் பற்றிய எந்தவொரு முறைப்பாட்டையும் விசாரித்தல்
- இழப்பீடு உட்பட, தகுந்த தீர்வை வழங்குதல் மற்றும் ஒரு நபருடைய சுதந்திரம் இழக்கப்பட்ட எந்த சந்தர்ப்பத்தையும் (இயங்கும் சுதந்திரம் மற்றும் பிறரால் தன்னிச்சையான தடுப்புக்காவலில் இருந்து விடுபடுவதற்கான சுதந்திரம்) ஆய்வு செய்வதற்கும் கண்காணிப்பதற்கும் தடையற்ற அணுகலை வழங்குதல்
- அரசியலமைப்பு ரீதியாக உத்தரவாதம் அளிக்கப்பட்ட உரிமைகளை விளக்குவதற்கு ஆணைக்குழு சர்வதேச மனித உரிமைகள் நியமங்களைப் பயன்படுத்துகின்றது

## ஆணைக்குழுவின் அதிகாரம்

- எந்தவொரு நீதிமன்றத்திற்கு முன்பாகவும் அடிப்படை உரிமைகள் தொடர்பான ஒரு விடயத்தில் தலையிடுவதற்கான அதிகாரம்

- சர்வதேச மனித உரிமைகள் விதிமுறைகளுக்கு (Norms) இணங்க இருப்பதை உறுதிசெய்வதற்கு தேசிய சட்டங்கள், நிர்வாக உத்தரவுகள் மற்றும் நடைமுறைகள் ஆகியவற்றை ஆராய்வதற்கான அதிகாரம். - அரசாங்கத்திற்கு பரிந்துரைகளை வெளியிடுவதன் மூலம் இது வெளிக்காட்டப்படுகிறது.

## HRCSLஇல் ஒரு முறைப்பாட்டை மேற்கொள்வது எப்படி

ஒரு அடிப்படை உரிமை மீறல் (அல்லது உடனடி மீறல்) ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட ஒருவர் அல்லது ஒரு பாதிக்கப்பட்டவர்களின் குழு, அல்லது உரிமை மீறலில் பாதிக்கப்பட்டவர்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற நபர் அல்லது ஒரு குழு HRCSLஇற்கு ஒரு முறைப்பாட்டை அளிக்கலாம். அடிப்படை உரிமை மீறல்களை ஆணைக்குழு தனது சொந்த பிரேரணையில் விசாரித்து ஆராயலாம்.

முறைப்பாடானது ஆணைக்குழுவின் ஆணைக்குள் வரவில்லையென்றால், அது ஏற்றுக்கொள்ளப்படாது. எவ்வாறாயினும், அது மற்றொரு அமைப்பின் ஆணைக்கு உட்படும் எனில் HRCSL முறைப்பாட்டாளரை அல்லது முறைப்பாட்டை அந்த அமைப்பிற்கு அல்லது நிறுவனத்திற்கு அனுப்பும் (உதா: நிர்வாக அநீதிகள், நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் (Ombudsman) அலுவலகத்திற்கு பரிந்துரைக்கப்படலாம்).

## இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் ஒரு முறைப்பாட்டை அளித்தல்

ஒரு மனித உரிமை/ அடிப்படை உரிமை மீறல் ஏற்பட்டால், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் (HRCSL) ஒரு முறைப்பாட்டை அளிப்பதற்கு உங்களுக்கு உரிமையுண்டு.

## முறைப்பாட்டை எழுத்து மூலமாகவோ அல்லது வாய்மொழி மூலமாகவோ அளிக்கலாம்

- ஒரு முறைப்பாடானது சிங்களம், தமிழ் அல்லது ஆங்கிலத்தில் மேற்கொள்ளப்படலாம்
- முறைப்பாட்ட படிவங்களை HRCSL (தலைமை அலுவலகம் அல்லது பிராந்திய அலுவலகங்களிலிருந்து அல்லது HRCSL இணையத்தளமான https://www.hrcsl.lk/home/ இலிருந்து இலவசமாகப் பெறலாம்.
- நேரிலோ, அஞ்சல் மூலமாகவோ, மின்னஞ்சல் மூலமாகவோ, தொலைநகல் மூலமாகவோ அல்லது (1996 ஐ அழைப்பதன் மூலம்) HRCSL உடனடி அழைப்பு ஊடாக தகவலைக் கொடுப்பதன் மூலமாகவோ பதிவுசெய்யப்படலாம்.
- முறைப்பாட்டுப் படிவத்தை இங்கே கண்டறியவும்: https://www.hrcsl.lk/wp-content/uploads/2020/03/Complaint-Form-final-new-01-01-2020-1-2-1.pdf
- முறைப்பாட்டை இங்கே சமர்ப்பிக்கவும்: https://www.hrcsl.lk/make-a-complaint/complaint-form

உங்களால் எழுத்து மூலமாக ஒரு முறைப்பாட்டை சமர்ப்பிக்க முடியாவிட்டால், அந்த முறைப்பாட்டை நீங்கள் வாய்மொழியாக சமர்ப்பிப்பதற்கு ஓர் அதிகாரியிடம் கோரலாம்.

### ஒரு முறைப்பாட்டில் சேர்க்கப்பட வேண்டிய தகவல்கள் யாவை?

- மீறப்பட்ட உரிமைகளை அடையாளம் காணல்.
- உரிமைகள் மீறப்பட்ட நபரை அடையாளம் காணல்.
- மீறலிற்கு/ மீறல்களுக்கு யார் பொறுப்பு என்பதை அடையாளம் காணல்.
- எந்த வகையில் உரிமைகள் மீறப்பட்டன?
- மீறல் எங்கே, எப்பொழுது நடந்தது?
- என்ன தீர்வுகளை நீங்கள் நாடுகின்றீர்கள்?

### ஆணைக்குழுவில் யார் ஒரு முறைப்பாட்டை அளிக்கலாம்?

- அடிப்படை உரிமை மீறலால் (அல்லது உடனடி மீறலால்) பாதிக்கப்பட்ட ஒருவர் அல்லது ஒரு பாதிக்கப்பட்டவர்களின் குழு
- உரிமை மீறலில் பாதிக்கப்பட்டவர்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ஒரு பாதிக்கப்பட்டவர் அல்லது ஒரு குழு
- ஊடகங்களில் முறைப்பாடு செய்யப்பட்டால் அல்லது வேறு வழியில் HRCSL தகவலை பெற்றால், ஒரு பாதிக்கப்பட்டவரால்/ பாதிக்கப்பட்டவர்களால் அளிக்கப்பட்ட ஒரு குறிப்பிட்ட முறைப்பாடு இல்லாமல் கூட HRCSL இனால் தலையிட முடியும்.
- ஆணைக்குழுவானது தனது சொந்த பிரேரணையில் ஒரு முறைப்பாடு அளிக்கப்படாமலும், அடிப்படை உரிமை மீறல்களை ஆராய்ந்து விசாரிக்கலாம்.

### நடைமுறை

முறைப்பாடானது ஆணைக்குழுவின் ஆணைக்கு உட்பட்டால்; வழக்கை தொடர போதுமான காரணங்கள் உள்ளதா இல்லையா என்பதை தீர்மானிப்பதற்கு முதற்கட்ட விசாரணை நடாத்தப்படும். மனுதாரரை அழைப்பதன் மூலம், பதிலளிப்பவரிடமிருந்து/ பதிலளிப்பவர்களுடமிருந்து ஓர் அறிக்கை அழைப்பதன் மூலம் வழக்கு ஆராயப்படும். ஒரு முதன்மையான வழக்கு இருந்தால் (முதல் நிகழ்வின் தோற்றத்திலிருந்து ஒரு சரியான வழக்கு); விடயத்தை விசாரித்து, மத்தியஸ்தம் மூலம் தீர்க்க முயற்சித்தல். மத்தியஸ்தம் தோல்வியுற்றால், ஓர் அடிப்படை உரிமை (FR) மீறல் கண்டறியப்பட்டால், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பரிந்துரை செய்யலாம். முறைப்பாடானது சுதந்திரம் அல்லது சித்திரவதை தொடர்பானதாக இருந்தால், மத்தியஸ்தம் அல்லது சமரசம் பயன்படுத்தப்படாது.

HRCSL அலுவலகங்களில் ஏதேனும் ஒன்றில் முறைப்பாடுகள் அளிக்கப்பட முடியும்;

- கொழும்பிலுள்ள தலைமை அலுவலகம் (இல. 14, ஆர்.ஏ.டி மெல் மாவத்தை, கொழும்பு 04, இலங்கை.)
- 10 பிராந்திய அலுவலகங்களில் ஒன்று (அம்பாறை, அனுராதபுரம், மட்டக்களப்பு, கண்டி, பதுளை, யாழ்ப்பாணம், கல்முனை, திருகோணமலை, வவுனியா, மாத்தறை)
- புத்தளத்திலுள்ள உப அலுவலகம்
- மீறல் எங்கு நடந்தாலும், இந்த அலுவலகங்களில் ஏதேனும் ஒன்றில் முறைப்பாடுகளை அளிக்கலாம்.

## அடிப்படை உரிமை (FR) மீறலுக்கான தீர்வு: நிர்வாகத்திற்கான குறைகேள் அதிகாரி (Ombudsman)

நிர்வாகத்திற்கான குறைகேள் அதிகாரி (Ombudsman) அலுவலகம், எந்தவொரு நபரும் அரச அல்லது பொதுக் கூட்டுத்தாபனங்கள், உள்ளூராட்சி நிறுவனங்கள் அல்லது பிற ஒத்த நிறுவனங்களின் அதிகாரிகளால் எடுக்கப்படுகின்ற நிர்வாக முடிவுகளால் தனது அடிப்படை உரிமைகள் மீறப்படுகின்ற பொழுது இத்தகைய அநீதிகளிலிருந்து நிவாரணம் பெற முடியுமான ஒரு முக்கிய நிறுவனமாக கருதப்படுகிறது.

அது இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு **அரசியலமைப்பின் 156 ஆவது உறுப்புரையின்படி, அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தத்தின் 45 வது உறுப்புரையின் கீழ் நிறுவப்பட்ட ஓர் அலுவலகமாகும். நிர்வாகத்திற்கான குறைகேள் அதிகாரி (Ombudsman)** ஜனாதிபதியால் நியமிக்கப்படுவார்.

ஓர் அரச அதிகாரியின், மாகாண சபைகளிலுள்ள ஓர் அதிகாரியின் அல்லது அரச கூட்டுத்தாபனங்களின் அல்லது பிற ஒத்த நிறுவனங்களின் ஓர் அதிகாரியின் செயல்களால் உடனடியாக ஏற்பட்ட அல்லது ஏற்பட்டுக்கொண்டிருக்கின்ற அல்லது ஏற்படக்கூடிய அடிப்படை உரிமை மீறல்கள் அல்லது பிற ஒத்த அநீதிகள் தொடர்பான முறைப்பாடுகள் கிடைத்தவுடன் விசாரணைகளை மேற்கொண்டு, நியாயமான பரிந்துரைகளை செய்வது நிர்வாகத்திற்கான குறைகேள் அதிகாரி (Ombudsman) இன் பிரதான செயற்பாடாக இருக்கின்றது.

ஒரு முறைப்பாட்டில் உள்ளடக்கப்படுகின்ற அத்தியாவசியமான தகவல்கள்

- எளிமையான மொழியில் தெளிவாகவும் சுருக்கமாகவும் முறைப்பாடு எழுதப்பட வேண்டும். (சிங்களம், தமிழ் அல்லது ஆங்கிலம்)
- எந்த செயலுக்கு எதிராக முறைப்பாடு மேற்கொள்ளப்படுகிறது, எந்த அதிகாரிக்கு எதிராக முறைப்பாடு தாக்கல் செய்யப்படுகிறது, அவருடைய முகவரி மற்றும் அவர் வகிக்கின்ற பதவிநிலை ஆகியவற்றை, தெளிவாக குறிப்பிடுவது அவசியமாகும்.
- அநீதி இழைக்கப்பட்டதாக கூறப்படுவதை நிரூபிப்பதற்காக முக்கியமான ஆவணங்களின் புகைப்படப்பிரதிகளை இணைப்பது மிகவும் பொருத்தமானதாகும். அந்த ஆவணங்களின் மூலங்கள் இணைக்கப்படக்கூடாது.
- முறைப்பாட்டாளரால் கோரப்படுகின்ற நிவாரணம் முறைப்பாட்டின் முடிவில் தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும்.

கடிதங்களை பரிமாறிக்கொள்வதன் மூலம் ஒரு தீர்மானத்திற்கு வருவதற்கு சிரமமாக இருந்தால், சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினர்களையும் அழைத்ததன் பின்னர் விசாரணையில் இந்த விவகாரம் விசாரணை செய்யப்பட்டு, ஒரு சுயாதீனமான விசாரணையை நடாத்தியதன் பின்னர் நிர்வாகத்திற்கான

குறைகேள் அதிகாரி (Ombudsman) சரியான பரிந்துரைகளை மேற்கொள்கின்றர். இறுதியில், முறைப்பாட்டாளர் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு நிர்வாகத்திற்கான குறைகேள் அதிகாரி (Ombudsman) மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள்/ பரிந்துரைகள் (recommendations)/ முன்மொழிவுகள் (suggestions) தெரிவிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் இத்தகைய தீர்மானங்கள்/ பரிந்துரைகளை (recommendations)/ முன்மொழிவுகளை (suggestions) நடைமுறைப்படுத்துவதற்கு பதிலளிக்கும் தரப்பினரிடம் நிர்வாகத்திற்கான குறைகேள் அதிகாரி (Ombudsman) கோரிக்கை விடுப்பார்.

குறிப்பிட்ட காலத்திற்குள் ஒரு நிறுவனத்தின் தலைவரால்/ அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் பரிந்துரை செய்யப்பட்ட எந்த நடவடிக்கையையும் திருப்திகரமாக நடைமுறைப்படுத்தப்படாவிட்டால் அல்லது ஏதேனும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தால், ஆழமான கண்காணிப்புக்களை கருத்திற்கொண்டு, சட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க, ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத்திற்கான சிபாரிசுடன் நிர்வாகத்திற்கான குறைகேள் அதிகாரி (Ombudsman) தனது இறுதி அறிக்கையின் பிரதியை முன்னெடுத்துச்செல்வார்.

முறைப்பாட்டாளரை காப்பாற்றுவதற்காக ஒரு சட்டத்தரணியின்/சட்டத்தின் உதவியையோ அல்லது வேறு எந்த நபரின் உதவியையோ பெறுதல் சட்டத்தின் விதிமுறைகளில் அனுமதிக்கப்படவில்லை. இருப்பினும், முறைப்பாட்டாளர் உடல் ரீதியாக தகுதியற்றவராக அல்லது பலவீனமான நோய்களை கொண்டவராக இருக்கின்ற பொழுது அவருடைய உறவின் அல்லது புரவலரின் benefactor உதவியானது, நிர்வாகத்திற்கான குறைகேள் அதிகாரி (Ombudsman) இன் விருப்பப்படி பெறப்படலாம்.

**நிர்வாகத்திற்கான குறைகேள் அதிகாரியினால் (Ombudsman) விசாரிக்கப்படாத முறைப்பாடுகள்**

- வேலைவாய்ப்புகள்/ வீடுகளுக்கான கோரிக்கைகள். (சட்டத்தின் பிரிவு 10(2))
- பொதுப் பாதுகாப்பு தொடர்பான விடயங்கள் மற்றும் பொதுப் பாதுகாப்பு கட்டளைச்சட்டத்தில் உள்ள விதிகள் தொடர்பான விடயங்கள். (பிரிவு 11(b)(i))
- ஆயுதப்படைகள், பொலிஸ் அல்லது பொது ஒழுங்கை பேணுவதற்கு பொறுப்பான பிற படைகளின் ஒரு உறுப்பினராக இருந்த அல்லது இருக்கின்ற எந்தவொரு நபரின் சேவை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுடன் தொடர்புடைய முறைப்பாடுகள். ( பிரிவு 11(b)(iii))
- ஒரு நீதிமன்றத்தில் (court of law) ஒரு தீர்மானம் அறிவிக்கப்பட்ட அல்லது விசாரிக்கப்படும் விடயங்கள். ( பிரிவு 11(b)(iv))
- அரச அதிகாரிகளின் நியமனங்கள், இடமாற்றங்கள், பணிநீக்கங்கள் அல்லது ஒழுக்கக்கட்டுப்பாடு தொடர்பான முறைப்பாடுகள். (பிரிவு 11(b)(v))
- கணக்காய்வாளர் நாயகத்தால் (Auditor General) கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்ட அல்லது மேற்கொள்ளப்பட்ட விடயங்கள் தொடர்பான முறைப்பாடுகள். (பிரிவு 11(b)(vi))

- ஒரு நீண்ட கால இடைவெளிக்கு பின்பு செய்யப்படுகின்ற முறைப்பாடுகள். (நியாயமற்ற தாமதம்) (பிரிவு 13(1)(c))
- அரச கொள்கைகள் அல்லது அமைச்சரவை தீர்மானங்கள் தொடர்பான விடயங்கள்.
- தேர்தல் ஆணையாளரின் தேர்தல் பிரச்சினைகள்.
- தனியார் நிறுவனங்கள் உட்பட தனியார் தரப்பினரிடையே ஏற்படுகின்ற மோதல்களுக்கு எதிரான முறைப்பாடுகள்.
- அநாமதேய அல்லது கையொப்பமிடப்படாத முறைப்பாடுகள்

### சுருக்கம்

அடிப்படை உரிமை மீறல்களுக்கு ஒரு தீர்வை காண்பதற்கான மூன்று வழிகள் இருக்கின்றன. முதலில் உயர்நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்ய வேண்டும். அரசியலமைப்பின் 126 வது உறுப்புரையின் படி, அத்தகைய மீறலுக்கு ஒரு மாத காலத்திற்குள் மனுத்தாக்கல் செய்வதன் மூலம், ஒரு அடிப்படை உரிமையின் உடனடி மீறலுக்கு நீங்கள் ஒரு தீர்வை நாடலாம். வழக்கமாக, இது யாருடைய உரிமைகள் மீறப்படுகின்றதோ அந்த நபரால் அல்லது அவருடைய சட்டத்தரணியால் செய்யப்பட வேண்டும்.

மேலும் நீங்கள் HRCSL இற்கு விண்ணப்பிக்கலாம் அல்லது ஒரு தீர்வை நாடுவதற்காக நிர்வாகத்திற்கான குறைகேள் அதிகாரிக்கு (Ombudsman) எழுதலாம்.

# அமர்வு **04:** கைது மற்றும் தடுப்புக்காவலில் வைக்கப்படும் பொழுதான உரிமைகள்

*ஒரு சுருக்கமான கலந்துரையாடல்.*

## நேரம்

45 நிமிடங்கள்

## இலக்கு குழு

அனைத்து குழுக்களும்
ஏறத்தாழ ஒரு குழுவில் 30 பங்கேற்பாளர்கள்

## குறிக்கோள்கள்

இந்த அமர்வின் முடிவில், பங்கேற்பாளர்களால்;

- கைது செய்யப்பட்ட அல்லது தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள ஒரு நபருக்கு கிடைக்கின்ற உரிமைகளை விவரிக்க முடியும்.
- ஒரு கைது நடக்கின்ற பொழுது பின்பற்றப்படும் அடிப்படை நடைமுறையை அறிந்துகொள்ள முடியும்.

## தேவையான கருவிகள்

- வெண்பலகை (whiteboard) மற்றும் எழுதுகருவிகள்
- பல்லூடக எறியி (multimedia projector) மற்றும் திரை (screen)

## தயாரிப்பு

- ஸ்லைடுகள்

## படிமுறைகள்

- இந்த அமர்வில், பங்கேற்பாளர்கள் கைது மற்றும் தடுப்புக்காவல் பற்றி அறிந்து கொள்வார்கள் என்பதை விளக்கவும்.

- கைது செய்யப்பட்ட ஒரு நபருக்கு இருக்க வேண்டிய உரிமைகள் யாவை என்பதை பங்கேற்பாளர்களிடம் கேட்கவும். அவர்கள் தொலைக்காட்சி அல்லது திரைப்படத்திலிருந்து உத்வேகத்தை பெற்றுக்கொள்ளலாம். பங்கேற்பாளர்கள் ஜோடிகளாக கலந்துரையாடலாம் மற்றும் கைது செய்யப்பட்ட அல்லது தடுத்து வைக்கப்பட்டுள்ள ஒரு நபருக்கு கிடைக்க வேண்டும் என்று அவர்கள் நினைக்கின்ற 3 உரிமைகளை எழுதலாம், இதனால் அவர்களின் மனித உரிமைகள் பாதுகாக்கப்படுகின்றன. இந்த பயிற்சிக்கு பங்கேற்பாளர்களுக்கு 10 நிமிடங்களை கொடுக்கவும்.

- அவர்கள் என்ன எழுதினார்கள் என்று கேட்டு, வெண்பலகையில் (whiteboard) பதில்களை ஒருங்கிணைக்கவும்.

- பெரும்பாலான பங்கேற்பாளர்கள் ஒரே மாதிரியான பதில்களை கொண்டிருப்பார்கள் என்பதை நினைவில் கொள்ளவும். புதிய மற்றும் வேறுபட்ட பதில்களை முன்னிலைப்படுத்தவும்.

- அனைத்து பங்கேற்பாளர் ஜோடிகளும் பங்களித்தவுடன், ஸ்லைடுகளின் உதவியுடன் முன்வைப்புக்குச் செல்லவும், அதற்கான குறிப்புகளை கீழே உள்ள 'குறிப்புகள்' பிரிவில் காணலாம்.

## குறிப்புகள்

### கைது அல்லது தடுப்புக்காவலில் வைக்கப்படும் பொழுதான உரிமைகள்

நீங்கள் கைது செய்யப்பட்டாலும் உங்களுக்கு அடிப்படை உரிமைகள் இருக்கின்றன. அரசியலமைப்பானது உறுப்புரை 13 இல் தன்னிச்சையான கைது, தடுப்புக்காவல் மற்றும் தண்டனை ஆகியவற்றிலிருந்து அடிப்படை உரிமைகளாக சுதந்திரம் அளிக்கின்றது.
அதாவது கைது, தடுப்புக்காவல் மற்றும் தண்டனை போன்றவை சட்டப்படி செய்யப்பட வேண்டியவையாகும்.
ஒருவருடைய SOGIESC எதுவாக இருப்பினும் சட்டத்தால் நிறுவப்பட்ட நடைமுறையின்படி தவிர, எந்தவொரு நபரும் கைது செய்யப்படக்கூடாது.

- கைது செய்யப்பட்ட எந்தவொரு நபருக்கும் அவர் கைது செய்யப்பட்டதற்கான காரணம் தெரிவிக்கப்பட வேண்டும்.
- கைது செய்கின்ற அதிகாரி சீருடையில் இல்லையென்றால், அவர்கள் தங்களுடைய பெயர், பதவி, இலக்கம் மற்றும் பொலிஸ் நிலையம் ஆகியவற்றை குறிப்பிட்டு தங்களை அடையாளப்படுத்த வேண்டும்.
- காவலில் வைக்கப்பட்டுள்ள அல்லது தடுத்து வைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு நபரும் அருகிலுள்ள தகுதிவாய்ந்த நீதிமன்றத்தின் நீதிபதியின் முன் கொண்டுவரப்படுவார்கள்.
- பிடியாணை இல்லாமல் கைது செய்யப்பட்டால் ஒருவர் 24 மணிநேரத்திற்கு மட்டுமே காவலில் வைத்திருக்க முடியும்.

கைது செய்யப்பட்டவுடன், பொலிஸ் அதிகாரி கைது செய்யப்பட்ட நபருக்கு, அவர்கள் கைது செய்ததற்கான காரணத்தை தெரிவிக்க வேண்டும்.

- ஒரு தேடுதலின் (search) பொழுது, தேடுதலுக்கான காரணத்தையும் நியாயமான சந்தேகத்திற்கான காரணத்தையும் ஒருவர் கூற வேண்டும்.
- ஒரு பெண் கைது செய்யப்படுகின்ற பொழுது, ஒரு பெண் பொலிஸ் அதிகாரி கட்டாயமாக இருக்க வேண்டும்.
- தேடுதலுக்கு சமர்ப்பிப்பதற்காக உங்களை குறித்த நிலையத்திற்கு அழைத்துச்செல்லுமாறு கோருவதற்கு உங்களுக்கு உரிமை உள்ளது.

கைது செய்யப்பட்டவுடன், கைது செய்யப்பட்ட நபரின் நண்பர், குடும்பத்தினர் அல்லது சட்டத்தரணிக்கு அவர் கைது செய்யப்பட்டதை தெரிவிப்பதற்கான ஒரு கடமை காவல்துறை அதிகாரிக்கு உள்ளது.

நீங்கள் காவலில் வைக்கப்பட்டால், உடைகள், தண்ணீர் மற்றும் உணவு போன்ற அடிப்படை வசதிகளை உங்களிடம் கொண்டு வருவதற்கு நீங்கள் கோரலாம்.
அரசியலமைப்பானது உறுப்புரை 11 இல் சித்திரவதையிலிருந்து விடுதலையை ஒரு அடிப்படை உரிமையாக உத்தரவாதம் அளிக்கின்றது. இதன் பொருள், ஒரு நபர் காவலில் இருக்கின்ற பொழுது, பொலிசார் எந்தவொரு நபரையும் அடிக்கவோ, உடல் ரீதியாக தண்டிக்கவோ, வாய்மொழியாக துஷ்பிரயோகம் செய்யவோ, அல்லது பாலியல் ரீதியாக துஷ்பிரயோகம் செய்யவோ முடியாது என்பதாகும். இந்த அடிப்படை உரிமையை எந்த சூழ்நிலையிலும் விட்டுவிட முடியாது. ஒரு நபருடைய SOGIESC அல்லது தொழில் எதுவாக இருப்பினும் இந்த உரிமைகள் பொருந்துகின்றன. அதாவது பாலியல் தொழிலில் ஈடுபடுபவர்கள், தன்பாலீர்ப்பாளர்கள் (gay/lesbian), இருபாலீர்ப்பு உள்ளவர் (bisexual), இடையிலிங்கத்தவர் (intersex) அல்லது திருநர் (transgender) உட்பட - அனைவரும் இந்த உரிமைகளுக்கு உரித்துடையவர்களாவர்.

### பயிற்சி வழங்குநருக்கான குறிப்பு

- ஒரு சந்தேகத்திற்குரிய நபரை பொலிசார் அடிப்பது சரியென்று ஏதேனும் நிகழ்வுகள் இருப்பதாக அவர்கள் நினைத்தால், அவற்றை பங்கேற்பாளர்களிடம் கேட்கவும்.
- வாக்குமூலமானது எந்தவொரு வழக்கிலும் நீதிமன்றத்தில் ஏற்றுக்கொள்ளப்படாது என்பதை விளக்கவும். வாக்குமூலத்தின் விளைவாக கண்டுபிடிக்கப்பட்ட ஆதாரத்தை மட்டுமே ஒப்புக்கொள்ள முடியும். பயங்கரவாத தடைச்சட்டம் ஒரு விதிவிலக்காகும்.
- எல்லா வழக்குகளிலும் சித்திரவதையிலிருந்து பாதுகாப்பின் தேவையை விளக்கவும்.
- • நீங்கள் *ஜெரால்ட் மெர்வின் பெரேரா (Gerald Mervin Perera)* [2003] 1 SLR 317[2] வழக்கை குறிப்பாக பயன்படுத்தலாம்.

பொலிசாரினால் தவறுகள் ஏற்படும் பட்சத்தில், இலங்கை பொலிசாரின் நடவடிக்கைகள் குறித்து நீங்கள் ஒரு முறைப்பாட்டை மேற்கொள்ள விரும்பினால்;

- ஒரு பொலிஸ் அதிகாரியின் அல்லது பொலிஸ் சேவையின் செயலால் பாதிக்கப்பட்ட எந்தவொரு நபரும் அரச முறைப்பாடுகள் விசாரணை பிரிவு அல்லது தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் (PCID) ஏதேனும் மாகாண அலுவலகங்களில் முறைப்பாடு செய்யலாம்.

[2] https://www.lawnet.gov.lk/wp-content/uploads/2016/11/037-SLLR-SLLR-2003-1-SANJEEWA-ATTORNEY-AT-LAW-ON-BEHALF-OF-GERALD-MERVIN-PERERA-v.-SURENDRA-OFFI.pdf

- ஒவ்வொரு மாகாணத்திற்கும், மாகாண அலுவலகத்தால் பெறப்படுகின்ற பொதுவான முறைப்பாடுகளின் மீதான விசாரணைகளுக்கு பொறுப்பாக இருக்கும் ஒரு மாகாண பணிப்பாளர் நியமிக்கப்படுவார். ஆணைக்குழுவிலுள்ள PCID பணிப்பாளரிடம் அவர் நேரடியாக முறைப்பாடு செய்வார்.
- ஒரு பொலிஸ் அதிகாரி அல்லது பொலிஸ் சேவைக்கு எதிராக பெறப்பட்ட எந்தவொரு பொதுவான முறைப்பாடும் ஒரு வாரத்திற்குள் ஒரு அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் ஒப்புக்கொள்ளப்படும்.

பிடியாணையுடன் அல்லது இல்லாமலேயே கைது செய்யப்பட்டால், **உடனடியாக சட்ட ஆலோசகரை வரவழைக்க கோருவது** நல்லது.

## பயிற்சி வழங்குநருக்கான குறிப்பு

- அமர்விற்கு முன்னதாக, இலங்கையிலுள்ள திருநர் (transgender) மற்றும் பாலியல் தொழிலாளிகளுக்கு எதிரான பாலியல் சித்திரவதைக்கான ஆதாரங்களை தெரிவிக்கவும்.
- படிக்க: ஆன்ட்ரியா நிக்கோல்ஸ், *'டான்ஸ் பொன்னையா டான்ஸ்: இலங்கையில் திருநர் பாலியல் தொழிலாளர்களுக்கு எதிரான போலீஸ் துஷ்பிரயோகம்'*, 2010
  https://journals.sagepub.com/doi/10.1177/1557085110366226

## சுருக்கம்

மக்கள் கைது செய்யப்படுகின்ற அல்லது தடுத்து வைக்கப்படுகின்ற பொழுது அவர்களுக்கு அடிப்படை உரிமைகள் இருக்கின்றன. கைது மற்றும் தடுப்புக்காவல் சட்டத்தின்படி மேற்கொள்ளப்பட செயன்முறையாகும். சித்திரவதையிலிருந்து விடுதலை என்பது இழிவுபடுத்த முடியாத ஒரு முழுமையான உரிமையாக இருக்கின்றது. தடுப்புக்காவலில் அல்லது காவலில் இருக்கின்ற பொழுது இடம்பெறும் எந்தவொரு சித்திரவதையின் வடிவமும் இலங்கை சட்டத்தின் கீழ் பாதிக்கப்பட்ட நபர் ஒரு தீர்வை பெறக்கூடிய ஒரு அடிப்படை உரிமை மீறலாகும்.

# அமர்வு 05: நடைமுறையிலுள்ள ஒரு குற்றவியல் குற்றத்திற்கான அல்லது ஒரு அடிப்படை உரிமை (FR) மீறலுக்கான தீர்வு

*நாடகம்*

## நேரம்

2 மணித்தியாலங்கள்

## இலக்கு குழு

அனைத்து குழுக்களும்
ஏறத்தாழ ஒரு குழுவில் 30 பங்கேற்பாளர்கள்

## குறிக்கோள்கள்

இந்த அமர்வின் முடிவில், பங்கேற்பாளர்களால்:

- குற்றவியல் குற்றம் அல்லது அடிப்படை உரிமை (FR) மீறலின் ஒரு கொடுக்கப்பட்ட சூழ்நிலையை பகுப்பாய்வு செய்து, நீதியை பெறுவதற்கான சிறந்த நடவடிக்கையை தீர்மானிக்க முடியும்.
- ஒரு நேர்மறையான விளைவை பெறுவதற்கு, ஏற்கனவே உள்ள தீர்வுப் பொறிமுறைகளை எவ்வாறு பயன்படுத்துவது என்பதை புரிந்துகொள்ள முடியும்.

## தேவையான கருவிகள்

- இந்த அமர்வுத் திட்டத்தின் முடிவில் இணைப்பின் பிரதி (Print out of the Annex)

## தயாரிப்பு

- ஒன்றுமில்ல

## படிமுறைகள்:

- பங்கேற்பாளர்கள் சாதாரண குற்றம் மற்றும் மனித உரிமை மீறலை வேறுபடுத்திக்காட்டிய அன்றைய முதலாவது அமர்வை நினைவுகூறவும். இந்த அமர்வில், பங்கேற்பாளர்கள் அதே காட்சிகளில் நடித்துக்காட்டுவார்கள் மற்றும் பொருத்தமான தீர்வு பொறிமுறைகளை கண்டுபிடிப்பார்கள் என்பதை விளக்கவும்**.**

- பங்கேற்பாளர்களை 5 குழுக்களாக பிரிக்கவும்

- ஒவ்வொரு குழுவிற்கும் ஒரு காட்சியைக் கொடுத்து, காட்சிகளின் பிரதிகளை குழுக்களிடையே விநியோகிக்கவும் (அமர்வுத் திட்டத்தை தொடருகின்ற இணைப்பில் காணப்படுகின்றன).

- கதாநாயகர் / கதாநாயகர்கள் முகங்கொடுக்கக்கூடிய சில சவால்களை மற்றும் அவர்கள் சவால்களை எப்படி சமாளிப்பார்கள் என்பதை பற்றி சிந்திக்குமாறு ஒவ்வொரு குழுவையும் கோரவும். கதாநாயகர்/ கதாநாயகர்கள் நேர்மறையான/விரும்பத்தக்க முடிவை அடையக்கூடிய சிறந்த வழியை கண்டறியுமாறு குழுக்களை கோரவும்.

- குழுக்கள் ஆக்கப்பூர்வமாக இருப்பதற்கு அனுமதிக்கப்படுகின்றன. மேலும் நகைச்சுவையையும் பயன்படுத்தலாம்.

- ஒரு 6-8 நிமிட ஸ்கிட் (skit) உடன் வருவதற்காக பங்கேற்பாளர்களுக்கு 30 நிமிடங்களை கொடுக்கவும்.

- ஒவ்வொரு குழுவிலும் குறைந்தபட்சம் ஒருமுறையாவது கலந்துகொண்டு அவர்களுக்கு ஆதரவளிக்கவும்.

- ஒவ்வொரு குழுவும் முன்வைத்த பின்பு, அவர்களுக்கு கைதட்டல்களை வழங்கவும் மற்றும் காட்சியின் முக்கிய அம்சங்களை சுருக்கிக் கூறவும் - கதாநாயகர் / கதாநாயகர்களால் முகங்கொடுக்கப்படுகின்ற சவால்களையும் அத்தகைய சவால்களை அவர்கள் எவ்வாறு சமாளித்தார்கள் என்பதையும் அடையாளம் காணவும். சட்டத்தை அறிந்திருப்பது அல்லது சட்ட ஆலோசகரை நாடுவது போன்ற ஏதேனும் நல்ல நடைமுறைகளை முன்னிலைப்படுத்தவும். ஒரு அமைதியான மற்றும் கூட்டு சூழல் அத்தோடு தெளிவான மற்றும் உறுதியான ஆனால் வன்முறையற்ற தகவல்தொடர்பை பேணுவது, விரும்பத்தக்க பேச்சுவார்த்தை நடத்துவது முக்கியமானதாகும் என்பதை விளக்கவும்.

- இது பயிற்சியின் இறுதி அமர்வு என்பதால், பங்கேற்பாளர்களுக்கு இந்த அமர்விலிருந்து, இந்த நாளிலிருந்து, அல்லது முழு பயிற்சிப்பட்டறையிலிருந்தும் (workshop) ஒரு கேள்வியை கேட்பதற்கான ஒரு வாய்ப்பை அளிக்கவும்.

- ஏதேனும் நேரம் மீதமிருந்தால், இந்த பயிற்சியின் மிகவும் மறக்கமுடியாத விடயத்தை பகிர்ந்துகொள்வதற்கு பங்கேற்பாளர்களை நீங்கள் அழைக்கலாம்.

## சுருக்கம்

ஒரு குற்றவியல் குற்றம், அல்லது ஒரு அடிப்படை உரிமை மீறல் தொடர்பாக எவ்வாறு ஒரு தீர்வை நாடுவது என்பதை பற்றி இன்று கலந்துரையாடினோம்.

இலங்கையின் தண்டனைச்சட்டக்கோவையில் குற்றவியல் குற்றங்கள் காணப்படுகின்றன. காயப்படுத்துதல், கொலை, பாலியல் வன்கொடுமை, கற்பழிப்பு/ பாலியல் வன்புணர்வு, மிரட்டி பணம் பறித்தல், அவதூறு மற்றும் திருட்டு ஆகியவை தண்டனைக்குரிய குற்றங்களுக்கு சில பொதுவான உதாரணங்களாகும். பாலியல் துன்புறுத்தல் குற்றத்தில் online இலும் offlineஇலும் செய்யப்படுகின்ற பாலியல் துன்புறுத்தல்களும் அடங்கும். நீங்கள் ஒரு குற்றவியல் குற்றத்திற்கு முகங்கொடுத்தால், ஒரு பொலிஸ் நிலையத்திற்கு செல்வதே சிறந்த நடவடிக்கையாகும். ஒரு பொலிஸ் நிலையத்திற்கு செல்வதற்கு முன்பு நீங்கள் நாடுகின்ற தீர்வு என்ன என்பதை நீங்கள் முடிவு செய்திருக்க வேண்டும். ஒரு குற்றவியல் வழக்கை விசாரிக்கின்ற பொறுப்பு அரசுக்கு உள்ளது. சந்தேக நபரை பொலிசார் தொடர்புகொள்வார்கள் அல்லது கைது செய்வார்கள். குற்றமானது ஒரு சிறிய குற்றமாக இருந்தால், நீங்கள் மத்தியஸ்த சபைகளுக்கு பரிந்துரைக்கப்படுவீர்கள். உங்களால் ஒரு சமரசத்திற்கு வர முடியாவிட்டால், விடயம் நீதிமன்றத்திற்கு செல்லும்.

மனித உரிமைகள் தேசிய மற்றும் சர்வதேச சட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இவை நீங்கள் ஒரு மனிதனாக இருப்பதன் மூலம் பெறுகின்ற உரிமைகளாகும். இந்த உரிமைகள் உலகளாவியவை மற்றும் பிரிக்க முடியாதவை (Inalienable). தேசிய சட்டமானது சில சிவில் மற்றும் அரசியல் உரிமைகளை, அடிப்படை உரிமைகளாக அங்கீகரிக்கின்றது. இவை அரசியலமைப்பில் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இந்த உரிமைகள் அரசுக்கு எதிராக செயற்படுத்தப்படக்கூடியவை - அடிப்படை உரிமைகள் நிறைவேற்று (executive) அல்லது நிர்வாக (administrative) நடவடிக்கையால் மீறப்பட்டாலோ அல்லது மீறப்படக்கூடும் என எதிர்வுகூறப்பட்டாலோ ஒருவர் ஒரு அடிப்படை உரிமைகள் மனுவுடன் உயர்நீதிமன்றத்திற்கு செல்லலாம். அடிப்படை உரிமை மீறல் ஏற்பட்ட ஒரு மாத காலத்திற்குள் நீங்கள் ஒரு அடிப்படை உரிமை மனுவை நீங்களாகவோ அல்லது சட்டத்தரணி மூலமாகவோ சமர்ப்பிக்கலாம்.

சட்டத்தை கற்றுக்கொள்வது ஒரு நியாயமான தீர்வை பெறுவதற்கான முதலாவது படிமுறையாகும். ஒவ்வொரு குடிமகனுக்கும் சட்டத்தை கற்றுக்கொள்ள வேண்டிய பொறுப்பு உள்ளது. சட்டத்தை அறிந்திருப்பது, எமது உரிமைகள் மீறப்பட்டால் விரைவாக நடவடிக்கை எடுப்பதற்கு எங்களுக்கு உதவுகின்றது.
எவ்வாறாயினும், சட்டத்தின் நடைமுறை நடைமுறைப்படுத்தல் சில தனித்துவமான சவால்களை கொண்டுள்ளது என்பதை நீங்கள் கவனிக்கலாம். நீதி முறைமை அல்லது சட்ட அமலாக்கம் பலதரப்பட்ட SOGIESCஐ கொண்ட மக்களுக்கு எதிராக சில பக்கச்சார்புகளை கொண்டிருக்கலாம். இருப்பினும், அனைத்து மக்களும் சட்டத்திற்கு முன்பு சமமாக நடத்தப்படுவதற்கும், மற்றும் சட்டத்தின் சமமான பாதுகாப்பிற்கும் உரிமையுள்ளவர்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள். உரிமைகள் மற்றும் தீர்வு பொறிமுறைகள் பற்றிய உங்களுடைய அறிவு மற்றும் உங்களுடைய வலையமைப்புகளின் பலம் போன்ற காரணிகள் உங்களுடைய விளைவுகளில் சாதகமாக செல்வாக்குச்செலுத்துவதற்கு உதவுகின்றன.

## இணைப்பு (Annex)

1. மெர்வின் ஒரு மாற்றுப்பாலின செயற்பாட்டாளர் (transgender activist). அவர் அவருடைய காதலி ரோஷ்னியுடன் பிலியந்தலையில் ஒன்றாக வாழ்ந்து வருகின்றார். தன்பாலீர்ப்பு வெறுப்புணர்வு (Homophobia), மாற்றுப்பாலின வெறுப்புணர்வு (Transphobia) மற்றும் இருபாலீர்ப்பு வெறுப்புணர்வு (Biphobia) போன்றவற்றுக்கு எதிரான சர்வதேச தினத்திற்காக, மெர்வின் ஒரு செய்தியாளர் மாநாட்டில் பேசி, மிகவும் அதிகமாக transphobicல் ஆன செய்திகளை கொண்ட One Country Movement என்கின்ற ஒரு வளர்ந்துவருகின்ற இளைஞர் அரசியல் குழுவை விமர்சித்தார். One Country Movement இன் தலைவரான மாலன், பல்கலைக்கழகத்தில் மெர்வினுடைய ஒரு வகுப்புத்தோழனாக இருந்திருக்கின்றார். மேலும் அவர் மது அருந்துவதற்காக மெர்வினுடைய வீட்டிற்கு வந்துள்ளார். எனவே, மெர்வின் எங்கு வசிக்கின்றார் என்பது மாலனுக்கு தெரியும். மெர்வினுடைய செய்தியாளர் மாநாட்டினால் கோபமடைந்த மாலன், மறுநாள் இரவு ஒரு குண்டர் குழுவை மெர்வினுடைய வீட்டிற்கு அனுப்புகின்றார். குண்டர்கள் மெர்வினை அடித்து, ரோஷ்னியை பாலியல் பலாத்காரம் செய்கின்றார்கள். மேலும் மெர்வினுடைய கணினியை எடுத்துக்கொண்டு, அவரது கணினி கடவுச்சொல்லை தருமாறும் வற்புறுத்துகின்றனர்.

2. தன்பாலீர்ப்பாளரான (gay) சரத் தனியாக வசிக்கின்றார். அவருக்கு 70 வயதாகின்றது. ஒரு நாள் அமல் மற்றும் கமல் என்கின்ற இரண்டு இளைஞர்கள் அவருடைய வீட்டிற்குள் புகுந்து, ஒரு மதிப்புமிக்க கடிகாரத்தை திருடுகின்றார்கள். சரத் பொலிஸ்ல் நிலையத்தில் முறைப்பாடு செய்கிறார். சரத்தினுடைய வீட்டிற்குள் புகுந்த இருவரையும், சரத்தையும் அடுத்த நாள் பொலிஸ் நிலையத்திற்கு பொலிசார் அழைக்கின்றனர். கமலின் மூத்த சகோதரர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் (OIC) நெருங்கிய நண்பராவார். கமலின் சகோதரர் OIC உடன் தொடர்பு கொண்டு, கமல் ஒரு சிறிய பிரச்சனையில் சிக்கியிருப்பதாகவும், அதை சரி செய்யுமாறும் கூறுகின்றார். அமலும் கமலும் பொலிஸ் நிலையத்திற்கு வநது, சரத் தான் தங்களை வீட்டிற்குள் அழைத்து, பாலியல்ரீதியாக நடந்துகொண்டதாக கூறுகின்றனர். தாம் அதனை மறுத்து வெளியேறியபோதும் எதையும் எடுத்துக்கொள்ளவில்லை எனவும் கூறுகின்றனர். அந்த இருவர் சொல்வது தான் உண்மை போல் தெரிகின்றது என்று சரத்திடம் போலீசார் கூறுகின்றனர். முறைப்பாட்டை எழுதுமாறு சரத் பொலீசாரிடம் கேட்கின்ற பொழுது, அவர்கள் மறுத்துவிடுகின்றனர்.

3. சவானி கொழும்பிலுள்ள கல்வித் திணைக்களத்தில் பணிபுரிகின்றார். அவர் தன்பாலீர்ப்புள்ளவராக (gay) இருக்கின்றார். 40 வயதான அவர் அவருடைய பெற்றோருடன் வசித்துவருகின்றார். எவ்வளவு கடினமாக உழைத்தாலும், அவருக்கு பதவி உயர்வு கிடைக்கவில்லை. ஒரு பதவி உயர்வுக்கு அடுத்த இடத்தில் தான் அவர் இருக்கின்றார் என்பது அவருக்கு தெரியும். இருப்பினும், அவர் பதவி உயர்விற்கு கருத்திற்கொள்ளப்பட மாட்டார் என்று அவர் தெரிந்துகொள்கின்றார். அவர் அவருடைய மேற்பார்வையாளரான மாலனியை அணுகி, தன்னை ஏன் பதவி உயர்வுக்கு கருத்திற்கொள்ளவில்லை என்று கேட்கின்றார். சவானி தன்பாலீர்ப்புள்ளவர் என்பதால், அவருக்கு ஒரு பதவி உயர்வை கொடுப்பது ஒரு புதிய கலாசாரத்தை ஊக்குவிப்பது போல தோற்றமளிக்கும் என்றும் அது திணைக்களத்திற்கு நல்லதல்ல என்றும் மாலனி விளக்குகின்றார்.

4. சியான் இலங்கையிலுள்ள அரச பாடசாலைகளில் ஒன்றில் கற்கின்ற 14 வயது மாணவன். வகுப்புத்தோழனான ராமன் மீது அவனுக்கு ஈர்ப்பு உண்டு. ஒரு நாள் சியான் ராமனுக்கு ஒரு காதல் கடிதம் எழுதுகின்றான், அது பாடசாலை ஆசிரியரால் கண்டுபிடிக்கப்படுகின்றது. ஆசிரியர் அதை அதிபரிடம் கொடுக்கின்றார். அதிபர் சியானுடைய பெற்றோரை பாடசாலைக்கு வரவழைத்து, அவனை பாடசாலையிலிருந்து நீக்குமாறு கூறுகின்றார். சியானுடைய தாய் ஒரு சட்டத்தரணி, அவர் சியானை பாடசாலையிலிருந்து நீக்குவதற்கு விரும்பவில்லை. உண்மையில், இது ஒரு அடிப்படை உரிமை (FR) மீறலாக இருக்கின்றது என்று அவர் நினைத்து தக்க நடவடிக்கை எடுக்கப்போகின்றார்.

5. ஜெனெல்லே ஓர் இளம் திருநங்கை (transwoman). ஒரு நாள், அவள் வேலைக்கு செல்கின்ற பொழுது, ஒரு வழக்கமான சோதனைச்சாவடியில் அவளுடைய வாகனத்தை போலிசார் நிறுத்துகின்றார்கள். அவளுடைய சாரதி அனுமதிப்பத்திரத்தில் அவளுடைய பெயர் ஜேசன் என்றும், பால் ஆண் என்றும் இருப்பதை கண்ட பொழுது, 'ஆள்மாறாட்டம் செய்து ஏமாற்றியதற்காக' அவர்கள் அவளை கைதுசெய்கின்றார்கள். அவளை பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச்சென்றவுடன், 2 அதிகாரிகள் அவள் சமூகத்திற்கு ஓர் அச்சுறுத்தல் என்று அவளை திட்டுகின்றார்கள். ஓர் அதிகாரி 'அவளுடைய மார்பகங்கள் உண்மையானவையா என்று பார்ப்பதற்காக' அவற்றை அழுத்துகின்றார்.

BRIDGE to Equality
සමානාත්මතාවය සොයා...
சமத்துவத்தை தேடுதல்...

BRIDGE to Equality (சமத்துவத்தை தேடுதல்) என்பது சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தினூடாக இலங்கையில் உள்ள LGBTQ மக்களுக்கான மனித உரிமைகளின் பாதுகாப்பை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட ஒரு திட்டமாகும். LGBTQ சமூகத்திற்கான நீதி விளைவுகளை மேம்படுத்த நீதித்துறை செயற்பாட்டாளர்கள் (நீதிபதிகள், வழக்கறிஞர்கள் மற்றும் பிற சட்ட வல்லுநர்கள்), ஆர்வலர்கள் மற்றும் மனித உரிமைகள் பாதுகாவலர்களை செயல்படுத்துவதனூடாக் தற்போதைய சட்டக் கட்டமைப்பால் சுமத்தப்படும் சவால்களை சமாளிப்பதுடன், LGBTQ மக்களின் மனித உரிமைகளின் ஒட்டுமொத்த மேம்பாடு மற்றும் பாதுகாப்பில் கவனம் செலுத்துகிறது.

BRIDGE to Equality (சமத்துவத்தை தேடுதல்) எனும் இந்த செயற்திட்டமானது DAST, தேசிய திருநர் வலையமைப்பு (NTN) மற்றும் யங் அவுட் ஹியர் (YOH) ஆகிய அமைப்புகளின் கூட்டாக 2021 முதல் சர்வதேச சட்டவல்லுனரகள் ஆணைக்குழுவுடன் இணைந்து செயல்படுத்தப்படுகிறது.


facebook.com/BridgetoEquality
instagram.com/bridgetoequality2021
twitter.com/B2ECampaign
bridgetoequalitycampaign@protonmail.com